

## 500 ஆண்டுகள் கூட

ஆகவில்லை அங்கே கொலம்பஸ் அடியெடுத்து வைத்து! காட்டுக் குணம் படைத்தோரும், கரடு முரடும் நிரம்பி வழிந்த அந்தப் பூபாகம் இன்று உலகமே கண்டு வியக்கும் உன்னதபுரியாக உருவெடுத்துள்ளது!

வானொலியோ, சேதி இதழோ, டெலிவிஷனோ, திசை சுற்றும் வான ஊர்தியோ—இல்லாத காலத்தில், இந்தியாவைத் தேடிப் போகிறேன் என்று கிளம்பினான் ஸ்பெயின் நாட்டிலிருந்து கொலம்பஸ். திசை தப்பிச் சென்ற அவனது நாவாய், புதுப்பூமியொன்றை அடைந்தது — அங்கே பொன், குவியல் குவியலாக உளது! நிலம் வளம் பெற்றுள்ளது! எனும் தகவல்கள், ஐரோப்பாவெங்கும் பரவவே, அனைவரும் போட்டிப் போட்டுக்கொண்டு கிளம்பினர்.

அவர்களிலே குறிப்பிடவேண்டியவர்கள் பிரிட்டிஷ்காரர்கள். புதுப்புரி நோக்கி அவர்கள் குடியேறச் சென்றது, இற்றைக்கு 350 ஆண்டுகளுக்கு முன்புதான்.

உலகத்திரையில் பழம்பெருமையுடன் விளங்கும் கிரேக்கமும் சீனமும் எகிப்தும் ரோமாபுரியும் பெற்றிராத ஏற்றத்தை இந்த 350 ஆண்டுகளிலே அடைந்துவிட்டது அந்தப் பூபாகம்! இங்கிலாந்தும், பிரான்சும், ரஷ்யாவும், ஜர்மனியும், பெற்றிருப்பதுபோல பழைய வரலாறுகளோ, சிறப்புகளோ பெற்றதல்ல அந்நாடு. ஆனால், இன்று உலக நாடுகள் யாவும் தன்னை நோக்கித் தண்டனிடுமளவுக்கு தலை தூக்கி நிற்கிறது, அமெரிக்கா.

மனித முயற்சி, கல்லையும் கவின் மலராக்கும் என்பதற்கோர் எடுத்துக்காட்டு அமெரிக்கா எனலாம். சோழனின் கோயில்களும், பல்லவனின் மாபலிபுரமும், பண்டைப் புகாரும், இலக்கிய வளம் நிரம்பிய வாழ்வும் பெற்று தமிழகம் வாழ்ந்த நாட்களிலே, 'அமெரிக்கா' எனும் நாடுகூட இல்லை! அங்கே யார், எப்படி வாழ்ந்தனர் எனும் விபரம் கூடக் கிடைத்ததில்லை! அந்நாடு, இரண்டு மூன்று தலைமுறைக்குள், வானளாவும் கூட கோபுரங்களுடனும், வாயைப்பிளக்கச் செய்யும் விஞ்ஞான அதிசயங்களும் பெற்று விளங்குகிறது.

காலக்குறி, எவ்வளவு வேகத்தில் உலகில் மாற்றங்களை உண்டு பண்ணுகிறது என்பதற்கு இதைவிட எடுத்துக்காட்டு ஏது!

பிரிட்டிஷ் அரசுக்கு, அமெரிக்கா கட்டுப்பட்டு காலந்தள்ளிய காலம் ஒன்று இருந்தது. இங்கிலாந்தில் வாழ்வோரும் கிருத்துவர்களே! அமெரிக்காவில் வாழ்வோரும் இயேசுநாதரின் வழிசெல்வோர்களே; அதுமட்டுமல்ல, இரத்த பாசமும் குடும்ப நேசமும் கூட கொண்டவர்கள். எனினும் தனியாக வாழ ஆசை கொண்டார்கள்.

# முகப்பில்...

மூவாயிரம் மைல்களுக்கப்பாலிருக்கிறது பிரிட்டன்! அது, நமது மூதாதையர் பூமி, நேசமும் பாசமும் காட்டுவோரின் இருப்பிடம். எனினும்...என்று புதுநாடு குடியேறியோர் எண்ணினர். அதன் விளைவாக, நாம், நமக்கென்று, ஏன் வாழக்கூடாது என்று கேட்டனர். அந்தக் கேள்வியை துச்சமென மதித்தது பிரிட்டன் — பிரபுக் குலத்தவர்கள் சீறலாயினர், பேதம் தகுமா, பிரித்து வாழ இயலுமா என்று சொல்லி. ஏனெனில், அவர்களுடைய பொருள்களுக்கு அப்போது நல்ல மார்க்கெட்டாகயிருந்தது அமெரிக்கா.

அரசுக்கோ, வரிவாங்கும் இடமாகயிருந்தது, அது. அரசை ஆட்டிப்படைக்கும் பிரபுக்களுக்கோ, கொழுத்த வியாபார கேந்திரமாக விளங்கிற்று; அதனால், தனித்து வாழ்வதைத் தடுக்க விரும்பினர். தகாது, ஆகாது என்றனர்.

அதன் விளைவாக, அமெரிக்காவில் சுதந்திரக் கனல் எழுந்தது! ஆள்வது நமது அரசர்தானே, நமது உறவினர்கள்தானே என்று பாராது வீரமுழக்கமிடலாயினர்—பிரிட்டிஷ் சர்க்காருக்கு வரி கொடோம் என்றனர், முதலில். ஸ்டாம்புக் கட்டணம் ஏன், தீர்வை ஏன், என்று எழும்பிய கூக்குரல் பிரிட்டிஷ் சாமான்களையே வாங்கோம் என்கிற அளவுக்குச் சென்றது.

"சரிதான்! நம்மவர்கள்தானே!" என்று விடவில்லை, பிரிட்டிஷ் அரசு. தமது இலாபக்கொள்ளையும், ஆதிக்கத் தர்பாரும் சாய்க்கப்படுகிறதெனக் கண்டதும் சண்டமாருதம்போலக் கிளம்பினர்—படைகளை அனுப்பினர். அந்தப் படைகள், அமெரிக்கச் சுதந்திர வீரர்களிடம் பட்டபாடு, வேடிக்கை நிரம்பியது! யாரும் பயமோ, படபடப்போ கொள்ளாது அவர்களைக் கேலியாலும் கிண்டலாலுமே தாக்கினராம் முதலில். இது பொருது, இங்கிலாந்திலிருந்து வந்தபடைகள், சுதந்திர வீரர்களைத் தாக்கலாயிற்று தடியாலும்—துப்பாக்கியாலும். 1770 மார்ச் 5-ந்தேதியன்று பிரிட்டிஷ் படைகளுக்கு ஐந்துபேர் இரையாயினர்-பாட்ஸ்டன் எனுமிடத்தில். ஒரே குலத்தோர் எனப்படுவோருக்கே இந்த வெகுமதி கிடைத்தது. காரணம், அவர்கள் தனியாட்சி விரும்பியதுதான்.

அடக்குமுறை சுதந்திர இயக்கத்தினரின் ஆர்வத்துக்கு தூண்டுகோலாவதை இங்கே உள்ள 'நாக நாடு' கூறவில்லையா! இதுபோல, அங்கும் வளர்ந்தது நிலைமை. இச்சமயத்தில், அமெரிக்காவில் தேயிலைக்கு கிராக்கியிருப்பதைக் கேள்விப்பட்டு, இங்கிலாந்து நாட்டிலிருந்த கிழக்கிந்திய கம்பெனி ஏராளமான தேயிலையை கப்பல்களில் ஏற்றிக்கொண்டு, படுகொலை நடைபெற்ற பாட்ஸ்டன் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தது. 1773 டிசம்பர் திங்கள் 16ந்தேதி அன்று சிலர், மேற்படி கம்பெனி முதலாளிகளிடம் வந்தனர், செவ்விந்தியர்கள் போல் வேடம் போட்டுக் கொண்டு.

"நீங்கள் ஏங்கே வந்தீர்கள்?"

"தேயிலை வாங்க வந்தோம்!"

"...அப்படியானால் கப்பலுக்குள் போய்ப் பாருங்கள்!"

முதலாளிகள் கரையில்! சுதந்திர இயக்கத்தினர் கப்பலுக்குள் மாறுவேடத்தில்!

உள்ளே புகுந்த சுதந்திர இயக்கத்தினர் மாலுமிகளைக் கட்டிப் போட்டுவிட்டு தேயிலைப் பெட்டிகளையெல்லாம், கொஞ்ச நேரத்தில் கடலில் தூக்கி எறிந்தனர். அந்தக் காட்சிதான், இவ்வார முகப்பில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ★

காஞ்சீபுரம்

18—11—'56

# தம்பி !

கடந்த ஒரு திங்களாகத் தமிழகத்தில், மாமழை பொழிந்த வண்ணமிருப்பதனைல், இப்போது எங்கு பார்த்தாலும், இயற்கை கொஞ்சுகிறது—ஏரி குளங்களில் எழில் வழிகிறது—வயல் வரப்புகளிலே வண்ணம் காணப்படுகிறது—மரம் செடி கொடிகள் யாவும் பசுமை பொழிகின்றன, பாங்கான காட்சி தெரிகிறது. வரண்டு கிடந்த இடங்கள், வெடித்துக்கிடந்த வயல்கள், தூர்ந்து கிடந்த வாவிகள வாய்க்கால்கள் எல்லாம் புதுக்கோலம் காட்டி நிற்கின்றன. எங்கள் மாவட்டத்தில், பாலாறு கூட 'கலகலென'ச் சிரித்துவிட்டது என்றால் பாரேன்!! பத்து பதினைந்து ஆண்டுகளாக, ஈரம் காணாது இருந்த ஏரிகளெல்லாம் இன்று நிரம்பி வழிகின்றன. 'வெறிச்சென்று' இருந்துவந்த வெளிகள் பெரு மழையால் வெள்ளக்காடாயின; மழை நின்றதும், சதுப்பாகி, இப்போது ஈரம் அழகளிக்கும் தோற்றம் தெரிகிறது. வரண்ட மனதினர் போன்றிருந்து வந்த குன்றுகளே இப்போது வளமளிக்கும் வகை பெற்ற நிலையில் இருக்கின்றன! அடவிகளின் நிலையைக் கூறவா வேண்டும்!

நள்ளிரவில், நான் நண்பர்களுடன் கூட்டம் முடித்துக்கொண்டு வருகிறபோது. 'சலசல' வென்ற ஒலி சூழ்ந்து கேட்கிறது! கதிரவனின் பொன்னிறக்கதிர் கிளம்பியவுடன், இயற்கையின் கோலம் காண்கிறேன்; உண்மையிலேயே இயற்கை கொஞ்சுகிறது. துரைத்தனத்தாரின் அலட்சியப்போக்கின் காரணமாகச் சிற்சில இடங்களில் 'உடைப்புகளும்' 'சேதங்களும்' ஏற்பட்டுவிட்டன; பட்டிகள் பலவற்றிலே மக்கள் அல்லற்பட நேரிட்டது; எனினும் மொத்தத்திலே, இயற்கை எழிலுடன் காணப்படுகிறது! இந்தப் பேருண்மை தெரியாமலா, 'மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்!' என்று மனம் கனிந்து பாடினார் இளங்கோ அடிகள்! வெண்ணிற மேகங்கள், உலவிய வண்ணம் உள்ளன—ஆடலழகிகள் நீல நிறத்திரை கொண்ட அரங்கிலே அன்னமென ஊர்ந்தும், அழகு மயிலென நடந்தும் காட்டும் பான்மைபோல! சூல் கொண்ட மங்கை புது எழில் பெறுதல்போல, மழை முத்துக்களைக் கருவிற் கொண்டு கருநிறம் பெறுகின்றன—காணக் காட்சியாகின்றன—பிறகு, முறையும் நெறியும் மறந்தோரின் பிடியிலே சிக்கிவிட்ட நாட்டவருக்கு நாமேனும் இதம் அளித்திடல் வேண்டுமே என்ற நோக்கு கொண்டதுபோல, இயற்கை தன் அன்பைச் சொரிந்திடக் காண்கிறோம்.

வாரி வாரி இறைக்கிறார்கள் தம்பி, பணத்தை, கோடிக்கணக்கில். கிராமப் புனருத்தாரணம் என்கிறார்கள், தேசிய விஸ்தரிப்புத்திட்டம் என்கிறார்கள், சீரமைப்பு என்று செப்புகிறார்கள், சமாஜப் பணி, மாணவர் சேவை, என்று ஏதேதோ பேசுகின்றனர்—எனினும் இயற்கை மழை பொழிந்தானதும், தம்பி, பல கிராமங்கள் தீவுகளாகிவிடக் காண்கிறோம்—பாதைகள் வாய்க்கால்களாகி விடுகின்றன—கிராமங்கள்

## ★ இயற்கை கொஞ்சுகிறது!
## ★ இல்லாமை கொட்டுகிறது!!

சகதிக்காடாகி விடுகின்றன! அந்த இலட்சணத்திலே இருக்கிறது, துரைத்தனம் அமைத்துள்ள பாதைத் தொடர்புகள்! பாலங்கள் ஓலமிடுகின்றன! மழை நீர் ஒழுங்காகச் செல்வதற்கான வ்ழிகால்கள் சரியாக அமைக்காததால், ஆங்காங்கு குப்பைகூள மேடுகள் கிளம்புகின்றன! இத்தனை கேடுபாடுகளேயும் நாம் மறந்திடச் செய்யும் விதத்தில், இயற்கை கொஞ்சுகிறது—இன்ப வாழ்வுக்கான வழி அளித்திருக்கிறேன் — வளம் கொழித்திட வகை தந்துவிட்டேன் — மகிழ்ச்சிப் பெருக்கெடுத்திட வேண்டும் என்பதற்காக மாமழை பெய்வித்துள்ளேன், மாந்தரே! காண்மின்! என் மீது குறை ஏதுமில்லை அறிமின்! வாழ்வில் இன்பம் பெறுவதற்குத் தடையாக நான் இல்லை என்பதை உணருமின்! உமக்கு உள்ள கொற்றம், குடிமக்களின் நல்வாழ்வு காணும் குறிக்கோள் கொண்டதாக அமைந்தால், உமக்கு வாழ்வில் இடர் ஏதும் வருவதற்கில்லை. என் கடமையைக் கனிவுடன் செய்துள்ளேன், காண்மின்! அதோ அருவி! இதோ ஏரி, குளம், மடுவு, வாய்க்கால்! எங்கும் பசுமை! வளம்பெறுவதற்கான வாய்ப்புகள்!!—என்று இயற்கை பெருமிதத்துடன் பேசுகிறது!!

ஆமாம், தம்பி, இயற்கை கொஞ்சுகிறது, எனினும், இல்லாமை கொட்டுகிறது! என் பயணங்களில் நான் இரண்டையும் காண்கிறேன்! எல்லோரும் இன்புற்று வாழ்வதற்குத் தேவையான அளவு செல்வம் செழித்திடத் தக்க சூழ்நிலையை இயற்கை அளிப்பதும் தெரிகிறது, மிகப் பெரும்பாலான மக்கள், இல்லாமையால் இடர்ப்படுவதும் தெரிகிறது!! இயற்கையின்மீது குற்றம் காண்பதற்கில்லை. நில நடுக்கமேற்பட்டு நாசம் விளேதல், நெருப்பைக் கக்கி நாசம் ஏவுதல் போன்றதேதுமில்லை! வெள்ளச் சேதம் சிற்சில இடங்களில் காண்கிறோம், அரசுக்கு ஆற்றல் இருந்தால் தடுத்து, சேதம் ஏற்படாது செய்திருக்க முடியும் என்பது தெரியத்தான் செய்கிறது.

**இயற்கை கொஞ்சுகிறது, இல்லாமை கொட்டுகிறது! காரணம் என்ன?**

வ்யலிலே பசுமை தெரிகிறது, உழைப்பாளியின் உடலிலே பசை காணோம்! இயற்கையின் அழகொளி எங்கும் தெரிகிறது, ஏழையின் கண்களோ இருண்டுதான் உள்ளன, ஒளி இல்லை!!

இயற்கை வளமளிப்பதாக இருந்தும், இல்லாமை இந்நாட்டு மக்களிலே மிகப் பெரும்பாலோரைக் கொட்டுகின்ற இந்த நிலைக்குக் காரணம் யாது, இந்த நிலையினை மாற்றிட வழி என்ன, இந்த வழியினைக் கண்டறிந்து கடமையினைச் செய்து வெற்றிகாணும் பொறுப்பை ஏன் துரைத்தனம் ஏற்றுக்கொள்ளவில்லை, அங்ஙனம் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளாத துரைத்தனத்தை, மக்கள் எங்ஙனம் அனுமதித்துள்ளனர், ஏன் சுமந்து கிடக்கின்றனர், என்ற இன்னபிற எண்ணங்கள் எழுந்த வண்ணம் இருக்கும், பயணத்தின் போதெல்லாம்.

பொதுக் கூட்டம் நடைபெறும் இடத்திற்கு, சுற்றுப்புறங்களிலிருந்து, பத்து, இருபது கல் தொலைவிலிருந்தெல்லாம், இளைஞர்கள், இருவர் மூவர் உந்து வண்டிகளில் வந்து குழுமிடக் கண்டு களித்ததுண்டு; இப்போது இலட்சிய ஆர்வம்கொண்ட இளைஞர்கள் மட்டுமல்ல, தம்பி, உழைத்து உழைத்து உருக்குலைந்து போயிருக்கும் விவசாயப் பெருங்குடி மக்கள், தாய்மார்கள் வருகிறார்கள்! கண்டதும் எனக்குக் கவலை குடைகிறது! ஆமாம், கவலைதான்! அவர்கள், உழைப்பின் பெருமையை உற்சாகத்துடன் பேசி வரும் தலைவர்களின் துரைத்தனத்தினால், என்ன கதிக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது, கவலை குடையாமலிருக்க முடியுமா! கவனித்தாயா, தம்பி, இயற்கை கொஞ்சுகிறது, உழைப்பு நிரம்ப இருக்கிறது, இருந்தும், இல்லாமை கொட்டுகிறது!

மானும் மயிலும் மட்டுமல்ல, பாம்பும் புலியும் பிறவும் பெறுகின்ற வாழ்க்கை வாய்ப்புகள்கூட இந்த கள்ளமில்லா உள்ளம் படைத்த மக்களுக்கு, துரைத்தனம் அளித்திட மறுக்கிறது. அந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவே மறுக்கிறது.

பட்டினியும் பசியும், வேலையில்லாக் கொடுமையும் இருந்திடல், அறமல்ல, அந்த அவல நிலையைக் கண்டும் மாற்றிட முனையாத துரைத்தனம், நாகரிகமுள்ளதென்று எவரும் கூறார். இங்கோ இயற்கை அன்பு சொரிகிறது, மக்கள் வியர்வையைக் கொட்டுகிறார்கள், எல்லாம் பதவியில் உள்ளோருக்கும் அவருக்குப் பராக்குக்கூறி வாழ்ந்திடும் செல்வர்களுக்கும் குளித்திடப் பன்னீர் ஆகிறது, உழைத்தும் வாழ்வில் சுகம்காணு மக்கள், கண்ணீர் பொழிகின்றனர்; கண்ணீர்த் துளி கட்சி என்று நம்மைக் கேலி செய்வதாக எண்ணிக்கொண்டு சிலர் செப்புகின்றனரல்லவா, இந்த மக்கள், கண்ணீர்த் துளி கட்சி என்றால், அது நம்கட்சி, இனம் இனத்தோடு என்றபடி கண்ணீர் கண்ணீருடன் கலந்து உறவாடலே முறை என்று எண்ணிக்கொண்டனர் போலும், பல்லாயிரக் கணக்கிலே கூடுகின்றனர்.

ஏத்தாபூர் என்றோர் சிற்றூரில் நான் பேசிக்கொண்டிருந்தேன்—நண்பர் N. V. நடராசன், சென்ற கிழமை முழுவதும், என்னைக்

## திருமணம்

சேலம் வழக்கறிஞர் வி. சிவப்பிரகாசம் பி.ஏ.பி.எல்., அவர்களுக்கும் திருவீழிமலை கிராம முன்சீப் திரு. ஏ. ஆஸ். எஸ். கல்யாணசுந்தரம் அவர்கள் திருநிறைச் செல்வி பரமேஸ்வரிக்கும் 26-10-56 வெள்ளிக்கிழமை காலை 10-மணிக்கு அண்ணு அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டி தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள் சி. பி. சிற்றரசு, கருணனந்தம், க. இராசாராம், 'சுதந்திரம்' ஆசிரியர் கே. அருணுசலம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இறுதியில் மணமகன் நன்றி கூறினர். மணமக்களுக்கு ஏராளமான பரிசுகளும், வாழ்த்துக்களும் வந்தன. குழிக்கரை பிச்சையப்பா குழுவினரின் நாதஸ்வர இன்னிசை நடைபெற்றது.

'கிட்டி'போட்டு வேலை வாங்குவது என்பார்களே, அதுபோல வேலை வாங்கினார்; செல்லுமிடமெல்லாம், தேர்தல் நிதி திரட்டு, நன்கொடை கேள், மேலும் மேலும் கேட்டு வாங்கு, பொதுச் செயலாளர் ஐந்து இலட்சம் கேட்கிறார், நிதி திரட்டு, உடனே, இங்கேயே, பணம் திரட்டிக் கொடு என்று 'சிமிட்டா' கொடுத்தபடி இருந்தார்; நான்கூட, குடந்தைக் கூட்டத்தில் சொல்லியும்விட்டேன். N. V. நடராசன் என்பதற்குப் பொருள் என்ன தெரியுமா நண்பர்களே! நன்கொடை வாங்கும் நடராசன் என்பது பொருள்—என்று!

ஏத்தாபூர் கூட்டத்தில் நான் பேசிக்கொண்டிருந்தபோது, கிராமத்து உழைப்பாளி ஒருவர்—முப்பது வயது இருக்கலாம் — அவர் மேனி உழைப்பால் கருத்து இருந்ததுபோலவே அவர் கட்டியிருந்த ஆடை காலத்தால் கருப்பாகிக் கிடந்தது,—மேடைக்கு வந்தார்—தேர்தல் நிதி என்றுகூறி, தொகையின் அளவு கூறாமல் பணம் கொடுத்தார் — தம்பி, ஒரு அணா!! ஆமாம்! அவ்வளவுதான் இருந்தது அந்த உத்தமனிடம். அதையேனும் கொடுத்தாக வேண்டும் என்ற கடமை உணர்ச்சி இருந்தது அந்தக் கண்ணியவானுக்கு. கனவான்களுக்கு உதிக்க முடியாத கடமை உணர்ச்சி அல்லவா அது! அந்த ஒரு அணாவை, நான் ஒரு இலட்சமாக மதித்து மகிழ்ந்தேன். உபசாரப்பேச்சு அல்ல! அந்த ஒரு அணாவை என்னிடம் கொடுக்கும்போது, நான் அந்த உழைப்பாளியின் முகத்தை நன்றாகக் கவனித்தேன்—இதயம் ஒரு அணாவாக வடிவெடுத்து வந்ததை உணர்ந்தேன். அன்று இரவு பசி நீக்கிக்கொள்ளப் பயன்பட்டிருக்கும், களைப்பு போக்க தேனீர் அருந்தப் பயன்பட்டிருக்கும், ஆனால் அந்தக் கண்ணியமிக்கவன், நாடு மீளவும் கேடு மாளவும் நான் என்னாலான காணிக்கையை இதோ செலுத்துகிறேன் என்ற எண்ணத்துடன் தருகிறான் ஒரு அணா!

இத்தகைய நல்ல மனம் படைத்தோரெல்லாம், இயற்கை கொஞ்சுகிறது, உழைப்பு நிரம்ப தரப்படுகிறது என்ற நிலை இருந்தும், இல்லாமையால் கொட்டப்படுகிறார்கள்,

இவர்களை ஆளும் காங்கிரஸ் கட்சியினரோ, ஏழைகளை ஈடேற்ற, அவர்களுக்குத் தொழில் தந்து துயர் துடைக்க, ஏற்கனவே இரண்டாயிரம் கோடி ரூபாய் செலவிட்டுவிட்டார்கள், இன்னும் ஒரு ஆறு ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப் போகிறார்கள்!!

உழைத்து உருமாறிக் கிடக்கும் உத்தமர்களே! உங்களுக்கு உள்ள தரித்திரத்தைப் போக்க, துரைத்தனத்தார் இரண்டாயிரம் கோடி ரூபாய் செலவிட்டுள்ளனர், அறிவீரா? என்று நான் பொதுக்கூட்டங்களில் எடுத்துச் சொல்லிவிட்டு, இவர்களின் முகத்தைப் பார்க்கிறேன்—திகைத்துப் போகிறார்கள் இந்த மக்கள். இரண்டாயிரம் கோடியா! எமக்காகவா! ஏற்கனவே செலவிட்டாகிவிட்டதா? நிஜமாகவா? ஏனய்யா இப்படிக் கேலி செய்கிறீர்! வெந்த புண்ணிலே வெந்தழலைப் போடுகிறீர்! பகல் பட்டினி இராப் பட்டினி என்ற நிலையில் இங்கு நாங்கள் அவதிப்படுகிறோம், எங்களிடம் வந்து இரண்டாயிரம் கோடி ரூபாய் எமக்காகச் செலவிட்டாகிவிட்டதென்று சொல்கிறீர்களே என்று கேட்பதுபோலிருக்கிறது அவர்கள் பார்வை.

இந்த இலட்சணத்தில் துரைத்தனத்தை நடத்தும் கட்சியினர் கல்கத்தாவில் கமிட்டி நடத்தி, மக்களுக்குப் புத்திமதி கூறுகின்றனர்! என்ன அறிவுரை அளித்துள்ளனர் அறிவாயோ, தம்பி, கேள்! கேட்டால், கைகொட்டிச் சிரிக்கத் தோன்றும்.

**சிக்கனமாக வாழவேண்டும்**
**செலவைக் குறைத்துக்கொள்ளவேண்டும்**

இதுதான், கல்கத்தாவில் சமதர்மச் சீமான்கள் கூடிக் கலந்து பேசித் தயாரித்த புத்திமதி.

வயிறாரச் சோறின்றி, மானமார ஆடையின்றி, குடியிருக்கக் குச்சியின்றி, நோய் தீர மருந்தின்றி இருக்கிறார்களே இவர்களைப் பார்த்துத்தான் காங்கிரஸ் தலைவர்கள் சிக்கனம் என்ற அறிவுரை கூறுகிறார்கள். மிக மிக நெஞ்சழுத்தம் இருக்கவேண்டும் இதற்கு! இருக்கிறது, இத்தகைய நெஞ்சழுத்தம், சீமான்களுக்கு.

"எப்போதும், உனக்கு இந்தப் பஞ்சப்பாட்டுதான்! சாமி! சாமி! பணம்! பணம்! பணம்! செச்சேச்சே! இப்படியாடா, உயிரை வாங்குவது. கையைப்பிடிப்பது, காலைப்பிடிப்பது, பணத்தை எப்படியாவது, கெஞ்சிக் கூத்தாடிப் பெற்றுக்கொள்வது; பிறகு கண்ணை மூடிக்கொண்டு, வீண் செலவு செய்வது இதே உனக்கு வழக்கமாகிவிட்டது." என்று எலும்பு உடையப்பாடுபடும் ஏழை உழவனுக்கு இதோபதேசம் செய்துகொண்டே, வெற்றிலைச் சாறைக் காரித்துப்புகிறாரே, வடபாதி மங்கலத்தார், குன்னியூரார், கோட்டையூரார், கொடிக்காலுடையார், அந்தச் சாற்றிலே, குங்குமப்பூவும் கிராம்பும், ஏலக்காயும் சாதிக்காய் ஜாபத்திரியும், இருக்கிறது, தம்பி! புளித்துப்போன கஞ்சிக்கு, உறைப்பு குறைந்துபோன மிளகாய்த் துண்டைத் தேடித் தவிக்கும் உழைப்பாளிக்கு, வீண்செலவு செய்யாதே என்று புத்தி கூறுகிறார்கள். கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் கமிட்டியில், இதே உபதேசம் தரப்பட்டது.

பர்மாவில் திராவிடநாடு விற்பனையாளர்,
R. S. மணி,
நேஷனல் ஸ்டோர்,
21, சூலைபையா (கோயில்)
இரங்கூன்.
பர்மாவில் விற்பனையாளர்களும், சந்தாதாரர்களும், தங்களுடைய பத்திரிகைகளை இவர்களிடம் பெற்றுக் கொள்ளக் கோருகிறோம்,

தினமணிக்கே பொறுக்கவில்லை. எவ்வளவு எரிச்சல் ஏற்பட்டிருந்தால், ஆளவந்தார்களின் இருமல் உறுமலைக்கூட இன்னிசை என்று கூறி, கூடச் சேர்ந்து தாளம் தட்டும் தினமணிக்கே கோபம் ஏற்பட்டு, வீண்செலவு செய்யாதீர் என்று ஊராருக்கு உபதேசம் செய்வது இருக்கட்டுமய்யா ஆள்வோரே! முதலில் உங்கள் ஊதாரித்தனத்தைச் சற்றுக் குறைத்துக்கொள்ளுங்கள் என்று கூறும், என்பதை எண்ணிப்பார், தம்பி.

"பொதுமக்களுக்கு உபதேசம் செய்யும் அநாவசியச் செலவுத் தவிர்ப்பையும் சிக்கனத்தையும், மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் முதலில்

**நாமே பின்பற்றி பிறருக்கு வழிகாட்டிகளாக இருக்கவேண்டும்"**

*தினமணியின் திருவாசகத்தில் ஒரு துளி இது!*

*என்ன பொருள் கிடைக்கிறது இதிலிருந்து? ஊதாரித்தனமாகச் செலவிடுகிறது சர்க்கார் என்ற உண்மை. எப்படிப்பட்ட சர்க்கார் இப்படிப்பட்ட ஊதாரித்தனமாக நடந்துகொள்கிறது? எம்மை மிஞ்சக்கூடியவர்கள் யாரும் இல்லை. எமக்கு நிகர் யாமே!—என்று தம் பட்டமடிக்கும் கட்சியினர். உலகத்திலேயே உத்தமர் என்று பெயரெடுத்த காந்தியாரால், மாணிக்கங்களாக்கப்பட்ட மண்ணாங்கட்டிகளெல்லாம், தம்மை இயற்கைமாமணிகள் என்று கூறிக்கொள்கின்றன! அவர் தம் ஆட்சியிலே நடைபெறும் ஊதாரித்தனம், தினமணிக்கே பிடிக்கவில்லை; குமட்டலெடுக்கிறது!!*

*தினமணிக்கு ஏதோ கோபம், அதனால்தான் 'எதிர்க்கட்சி' பேசுகிறது, என்று எவரும் எண்ணிவிடக்கூடாது என்பதற்காக, மேலும் விளக்கம் அளிக்கிறது, அந்த ஏடு.*

**"சர்க்கார்களின் முயற்சிகளில் வீண் செலவு அம்சம் ஒரு அளவு இருக்கிறது என்பது உலகமறிந்த விஷயம். தணிக்கைக் கமிட்டிகள் இவற்றை ஒருவாறு புலப்படுத்தியுள்ளன. இவற்றிற்குமேலாக தண்டச் செலவுகளும் இருக்கக் கூடும். ஏராளமான அதிகாரிகளும், கமிட்டிகளும், கோஷ்டிகளும், ஜமாக்களும், ஆலோசனைகளும், அதிகாரிகளின் மகாநாடுகளும், நடந்துகொண்டே இருக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை அடிபட்டுப் போகவேண்டும். இதில் ஏற்படும் வீண் செலவும் வேலை நஷ்டமும் கொஞ்சநஞ்சமல்ல"**

*தம்பி! இயற்கை கொஞ்சுகிறது! இல்லாமை கொட்டுகிறது! இந்த நிலைமைக்குக் காரணமாக உள்ளவர்கள், 'ஜமாக்கள்' அமைத்துக் கொண்டு தண்டச்செலவு செய்து கொண்டு இருக்கிறார்கள். இது உலகறிந்த விஷயம் என்று தினமணி கூறுகிறது.*

*ஒவ்வொரு முறை தணிக்கைக் கமிட்டி தன் கருத்துரையை வழங்கும்போதும், நடைபெற்ற ஊழல்களை இடித்துக்காட்டுகிறது! எனினும், தண்டச் செலவும், தர்பார் போக்கும் துளியும் குறைவது கிடையாது. எதற்கு எடுத்தாலும் ஒரு கமிட்டி! எந்த விஷயத்தைப் பற்றிப் பரிசீலிக்கவும் ஒரு 'ஜமா'—ஒவ்வொன்றுக்கும் படிச் செலவு! ஒன்றை ஒன்று மிஞ்சும் விதத்தில் செலவு! ஒரு கமிட்டியின் கருத்துக்கு நேர்மாறாக மற்றோர் கமிட்டியின் கருத்து! இந்தவிதமான ஆட்சியைச் செய்துகொண்டு, பணத்தைப் பாழாக்கி வருகிறவர்கள்தான், பாட்டாளிகளுக்கு சிக்கனமாக வாழ்க்கை நடத்துங்கள்! வீண் செலவு செய்யாதீர்கள்! என்று உபதேசம் செய்கிறார்கள். இந்த அபாரமான கண்டுபிடிப்புக்காகக் கல்கத்தாவில் கூடினர்! நாடெங்கும் கொட்டமடித்துக் கிடக்கும் எந்தக் காட்டரசனுக்கும் தெரியுமே இந்த உபதேசம்.*

*பொதுப்படையாகப் பேசுவது போதாது — சுட்டிக்காட்டியாவது இவர்களைத் திருத்தவேண்டும் என்றுகூடத் தினமணிக்குத் தோன்றி இருக்கிறது. எனவே, துரைத்தனம், எப்படியெப்படி தண்டச் செலவு செய்கிறது என்பதைப் படம் பிடித்துக்காட்டவே முற்பட்டிருக்கிறது.*

**"ஒரு சிறிய பள்ளிக்கூடத்துக்கு கால்கோல் விழா, சிறிய ஓடைப்பாலத் திறப்பு விழா போன்ற சாதாரண ஸ்தல பணிகளுக்கு மந்திரிகள் அழைக்கப்படுவதும், அநேகமாக எல்லா ஜில்லா அதிகாரிகளும் வர வேண்டியிருப்பதும், சகஜமாகி விட்டது. இதனால் ஏற்படும் செலவுகள் முற்றிலும் அநாவசியமானவை"**

*இவ்வளவு பச்சையாக எடுத்துக் காட்டியாவது, திருத்தலாம்என்று தினமணி கருதுகிறது.*

*அமைச்சர்களுக்குக்கூடச் சிறிதளவு கோபம் உண்டாகும். திண்ணைப் பள்ளிக்கூடத் திறப்பு விழாவும், ஓடைப்பால அமைப்பு விழாவுக்கும் நாம் சென்று வீண் செலவிடுகிறோம் என்று தினமணியே கேலிசெய்கிறதே என்று வருத்தமாக இருக்கும். ஆனால் இது போன்ற ஒவ்வோர் விழாவையும், மக்கள் காண நேரிடும்போது எத்துணை வேதனை அடைகிறார்கள் என்பதை இந்த அமைச்சர்கள் உணர்ந்தால்தானே! எத்தனை எத்தனை வீண் விழாக்கள்! தண்டச் செலவுகள்! எத்தனை கால்கோள் விழாக்கள்! கட்டடம் என்றென்றும் எழுப்பப் போவதில்லை என்பது, ஊராருக்கும் தெரியும், இவர்களும் அறிவார்கள், எனினும் அதற்கும் ஓர் விழா! மக்களைக் காணவும், மக்கள் முன்பு தமக்குக் கிடைத்துள்ள புதிய மதிப்பைக் காட்டிக்கொள்ளவும், மாவட்ட கலெக்டர் முதற்கொண்டு, தமது ஏவலர்களாகக் கைகட்டி வாய் பொத்தி நிற்பதைக்காட்டவுமன்றோ இந்த விழாக்கள் நடக்கின்றன. வீண் விழாக்கள்! தண்டச் செலவு! என்று கண்டிக்கும் இதே தினமணிகள், இந்த விழாக்களின் கோலத்தை விளக்கத் தனி நிருபர்களை அனுப்புவதும், படம்போட்டுப் பாராட்டுவதும் கொஞ்சமா! இப்போது, நாற்றம்தாளமுடியாததாகி விட்டதால், இந்தத் தண்டச் செலவுகள் ஏன் என்று கேட்டுத் தீர வேண்டி வந்தது இந்த ஏட்டுக்குக்கூட!*

**"பிறர் நாலணாவில் செய்யக்கூடியதை சர்க்கார் செய்தால் எட்டணா ஆகிறது என்ற பழிச் சொல்லுக்கு இடங் கொடுக்கலாகாது. நாம் தரும் வரிப்பணம் அதிகபட்ச சிக்கனமாகவும், திறம்படவும் பயன்படுகிறது என்ற நம்பிக்கை பொதுமக்களுக்கு ஏற்படவேண்டும்"**

*என்று 'இரத்தினச் சுருக்கமாக' இன்றைய ஆட்சிமுறையின் யோக்யதையைத் தினமணி அம்பலப் படுத்துகிறது.*

*இன்றுள்ள ஆட்சிமட்டும் காங்கிரஸ் கட்சியுடையதாக இல்லாமலிருந்தால், தினமணியின் எழுத்திலே தீப்பொறி காண்போமே!*

*ஜஸ்டிஸ் கட்சிக் காலமாக இருந்தால், என்னென்ன எழுதத் தோன்றும், இந்தத் தேசீய ஏடுகளுக்கு!*

*ஏழை அழுகிறான்; அவனைக் கொள்ளை அடித்துக் கொட்டமடிக்கிறார்கள்.*

*கமிட்டி கமிட்டி என்று அமைத்துக்கொண்டு, ஏழையின் பணத்தைப் பகற் கொள்ளை அடிக்கிறார்கள்.*

(15-ம் பக்கம் பார்க்க)

# கனலில் தங்கம்

**9**

**கணவர்** வந்ததும் அவரிடம் சேதியைச் சொல்லி, சான்றாகக் கடிதத்தையும் காட்டிவிட வேண்டும், நம்மால் செய்யக்கூடியது அதுதான், உற்ற நேரத்தில் செய்தி தெரிந்தால் அதனாலாவது ஏதேனும் நன்மை விளையாதா என்று எதிர்பார்த்துக் கணவர் வருகைக்காகக் காத்துக்கிடந்த ஆர்வத்தில் அவர் வந்ததும் ஓடிச் சென்று கடிதத்தை நீட்டினேன். என்றாலும் அதற்குள் நான் பட்டபாடு; நடுங்கிய நடுக்கம்; அஞ்சிய அச்சம்; நினைத்தாலே இப்போதும் நடுக்கம் பிறக்கின்றது.

என்ன சொல்லுவாரோ? என்ன நினைப்பாரோ? என்று ஏதேதோ எண்ணிக் குழம்பியபடியேதான் கடிதத்தை நீட்டினேன்.

"என்ன அது......"

"என்னது அது என்று அலட்சியமாக வாங்கிப் படித்தவர் கண்கள் சிவ்வென்று சிவந்து கோவைப் பழங்களாயின. உதடுகள் துடித்துப் பதறின. "அப்படியா? மெய்தானா? சொல்" என்று என் கைகளைப் பற்றிக் கொண்டு கேட்டார். அந்தக் கைகளின் பிடியில் இதற்கு முன்னும் நான் சிக்கி இருக்கிறேன். அப்போது மென்மையை உணர்ந்த கைகளில் இப்போது வன்மையைக் கண்டேன். வன்மையை மட்டுமா கொடுமையையும் கண்டேன்.

"ஆமாம்" என்று குளறினேன். 'ஆமாம்' என்ற சொல் காதில் விழுந்ததும் என் கணவர் வெறிபிடித்தவர் போலானார். ஒரு கையில் கடிதத்தைப் பற்றியபடி மற்றொரு கையால் என்னைப் பற்றி இழுத்துக்கொண்டு ஓடினார் வீட்டிற்குள். "எங்கே அவள்?" என்று கூச்சலிட்டார் கூடத்திற்கு வந்ததும்.

ஓரகத்தி கண்ணில் பட்டதும் அவள் எதிரே அந்தக் கடிதத்தை வீசி எறிந்து,

"என்ன இது. அவ்வளவு தூரத்திற்கு வந்துவிட்டதா?" என்று உறுமினார்.

ஒரு கணத்தில் ஓரகத்திக்கு எல்லாம் விளங்கிவிட்டது. கைகால் நடுங்கி வெலவெலத்துப் போவாள் என நான் எண்ணியதற்கு மாறாக

"ஊம். என்ன செய்வது. அப்படி ஆகிவிட்டது. நாம் என்ன செய்வது', என்றாள். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. கணவர் ஏதோ கேட்க இவள் ஏதோ சொல்கிறாளே எனத் திகைத்தேன்.

"அப்படியா சேதி?" என்றார் கணவர்.

"நான் என்ன செய்வது? எவ்வளவோ சொல்லிப்பார்த்தேன். கேட்கவில்லை. அவள் விருப்பம். உனக்கு ஏன் தொல்லை" என்றாள் அவள்.

என்னுடைய திகைப்பு பின்னும் வளர்ந்தது. கணவரோ ஏதும் தெரியாது விழித்தார்.

"நீ என்ன சொல்லுகின்றாய்?" என்றார்.

"நான் என்னத்தைச் சொல்ல? நேற்றே சொன்னேன் இவள் அந்தப் பொன்னுசாமியிடம் பேசிக்கொண்டிருந்தாள் நான் இல்லாதபோது என்று என் பேச்சை யார் கேட்டார்கள்"

"என்ன?"

"என்ன, இந்தக் கடிதம் வந்ததை இந்தப்பாவிக் கண்ணால்தான் பார்த்தேன். அப்போதே ஐயப்பட்டு 'என்னடி அம்மா இது. பொல்லாத

**மா. கி. தசரதன்**

வழக்காயிற்றே. நம் குடும்பத்திற்கு அடுக்குமா? விட்டுவிடடி வேண்டாம் என்று எவ்வளவோ சொன்னேன். அவள் கேட்டால்தானே. எல்லாம் எனக்குத் தெரியும் உன் வேலையைப் பார்' என்றாள். என் மனது கேட்கவில்லை. 'அந்தக் கடிதத்தைக் கொடடி அம்மா கொளுத்திவிடுகிறேன். அவர் கண்ணில் பட்டால் தப்பு' என்று கூடச் சொன்னேன். என் பேச்சுக்கு எங்கே மதிப்பு இருக்கிறது? 'பார்க்கட்டுமே. எனக்கென்ன அச்சமா' என்றாள். உனக்கு இருக்காதடி அம்மா. எனக்கு இருக்குமே. என் கடமை அவர் வந்ததும் இதைப் பற்றிச் சொல்லப்போகிறேன் என்றேன். 'ஆ அவ்வளவுக்காயிற்றா? எனக்கா தெரியாது. நானே முந்திக் கொள்ளுகின்றேன். இந்தக் கடிதம் உனக்கு வந்தது என்று அவர் வந்ததும் ஓடிச் சென்று முதலில் சொல்லி விடுகிறேன். யார் பேச்சை நம்புகின்றார்கள் பார்ப்போம்' என்றாள். நான் என்ன செய்வேன்" என்றாள்.

அதைக் கேட்டதும் என் உடல் தீப் பற்றி எரிவதுபோல் உணர்ந்தேன். கொடும்பாவியாக இருக்கிறாளே எந்தப் பழிக்கும் அஞ்சமாட்டாள் போல் தோன்றுகின்றதே என நடுங்கினேன்.

கணவர்க்கோ ஓரகத்தியின் மீது இருந்தசினம் என்பக்கம் திரும்பியது. ஆனாலும் ஓரகத்தி சொன்னதை நம்பாதவர்போலும் காணப்பட்டார். எங்கே முற்றிலும் நம்பாமல் போகின்றாரோ என்று மீண்டும் ஓரகத்தியே பேசினாள்.

"அவனையே வேண்டுமானால் கேட்போம் யாருக்கு இதை எழுதினான் என்று" என்றாள்.

என்ன விருப்பம்தானா என்பது போல் கணவர் என் முகத்தைப்பார்த்தார். என் குலை நடுங்கியது.

இவ்வளவு தூரம் கதையைத் தலைகீழாக மாற்றிய ஓரகத்தி இதற்குமா ஏற்பாடு செய்யாமல் இருந்திருப்பாள். அழைத்துக் கேட்டால் அந்தக் கொடியவன் எனக்குத்தான் எழுதியதாகச் சொன்னாலும் சொல்லுவானே என எண்ணி அஞ்சினேன். ஓரகத்திவிட்ட சவாலை ஏற்க முடியாமல் தத்தளித்தேன்.

என் நிலையைத் தவறாகப் புரிந்து கொண்ட கணவர் வெறிகொண்டவர் போலானார். எந்தக் கணவனும் தான் எவ்வளவு தவறு வேண்டுமாயின் இழைப்பதை இயல்பு என்றுகொள்ளுவான். தன் மனைவியின் நடத்தையில் துளி ஐயம் தவறான ஐயம் தோன்றிவிட்டாலும் எல்லை கடந்து அவளைத் தண்டிக்க விரும்புகிறான்.

நான் உண்மையிலேயே மனத் தளவிலாவது குறை உடையவளாக இருந்திருப்பின் கணவர் தந்த அரைகளை ஏற்பதில் இன்பம் கண்டிருப்பேன். வேண்டும் இந்தத் தண்டனை என அமைந்திருப்பேன். ஆனாலும் ஒரு பிழையும் கருதாத என்னை ஓரகத்தியின் கொடும்பழி கேட்டு இரு கன்னங்களும் வீங்குமாறு அரைந்தார். அமைதியாக ஏற்று நின்றேன் அவற்றை. அந்த அளவோடு நின்றிருந்தாலும் கவலையற்றிருந்திருப்பேன். ஆனால் கணவரோ அதற்கு மேலும் சென்று "திருட்டு நாயே நீ நாளை என்ன போவது. இன்றே ஓடிப்போ அந்தப் பயலுடன் — உன் காற்றுப் பட்டாலே இந்த வீடு அழிந்துபோகும் ஒழிந்துபோ நீ முதலில்" என்று சொல்லியபடி கழுத்தில் கையை வைத்து தெரு வாயிற்படியைத் தாண்டிக் கொண்டுவந்து தள்ளிவிட்டு கதவையும் தாள் இட்டுக்கொண்டார்.

நல்லவேளை அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் எல்லோரும் அடுத்த ஊரில் ஏதோ திருமணத்திற்குப் போய் இருந்தார்கள். இருந்த இரண்டொருவரும் எங்கோ வேலையாக இருந்துவிட்டார்கள். அதனால் இந்த நாடகத்தை யாரும் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் மட்டும் என்ன இடைவந்து நின்று தடுத்திடுவார்களா? அல்லது நல்லது கெட்டது சொல்வார்களா? இந்தக் குடும்பத்தில்தான் அது இல்லையே.

கிராமம் என்றால் எங்காவது 'தொட்' என்று ஒரு சிறு ஒலி கேட்டாலும் என்ன? என்ன? என்று எல்லோரும் அங்கு கூடிடுவர். ஆனால் இந்த வீட்டிற்கு நான் இங்கு வந்தது முதல் பார்த்தேன், அண்டை அயல் வீட்டார் பழக்கத்தை அறவே காணேம். நகரங்களில் வாழுகின்றவர்களைப் போல் யாருடனும் ஒரு தொடர்பும் இன்றித் தனித்து இருக்கின்றார்கள். ஓரகத்தி தான் இதற்குக் காரணம் என்பது எனக்கு நன்றாக விளங்குகின்றது.

அதனால் எவ்வளவுதான் குறை இருந்தாலும் அன்று இரவு மட்டும் 'எவ்வளவு நல்லது' என்று அவ்வளவு கலவரத்தின் இடையிலும் ஒரு கணம் எண்ணினேன். இல்லாவிட்டால் ஊர்கூடி என் நிலையைக் கண்டு, குடும்பத்தின் இழிவைக் கண்டு, நகைத்துவிட்டிருப்பார்களே. ஓரகத்தி கதையைச் சொன்னதும் "இவளும் அவ்வளவுதானா? எல்லாம் நடிப்புத் தானா?" என்று சிரித்துவிட்டிருப்பார்கள். அது இல்லாமல் போயிற்று. கேட்டிலும்கூட நன்மை இருக்கத் தான் இருக்கிறது என்று எண்ணினேன்.

இரவெல்லாம் தெருவாயிற்படியில் கிடக்க எண்ணினேன். எதிர்வீட்டு கடிகாரமோ மணி அடித்து அடித்து காலத்தின் கழிவை உணர்த்திக் கொண்டிருந்தது.

இனி என் வாழ்க்கையில் என்றுமே இருள்தானா என எண்ணிச் சோர்ந்தேன். இனிமேல் வீட்டிற்குள் சென்று சேர முடியாது என்பது தீர்மானமாகிவிட்டது. அம்மாவிடத்திலும் என்ன சொல்வது? விடிந்தால் சேதி வெட்டவெளி ஆகிவிடுமே என்ற கவலையும் உள்ளத்தை உருக்கியது.

ஊராரும் உற்றாரும் ஒழுக்கம் கெட்டவள் என்று காணும்போதெல்லாம் தூற்றித் திரிய இடம் தரவேண்டுமா என்று எண்ணினேன். வேறுவழியே இல்லையா என்று எண்ணியபோதுதற் கொலை என்ற சொல்லை நினைந்தேன்.

தெருக்கோடியில் இருக்கும் குளம் போதும் அதற்கு இல்லை என்றால் பள்ளிக்கூடத்திற்கு எதிரில் இருக்கும் கிணறுபோதும், என்று தீர்மானித்தேன். ஆனால் மறுகணமே 'சே வேண்டாம் நாளை ஊர் மக்கள் உண்ணும் நீரையும் ஏதும் அறியா இளம் பிள்ளைகள் ஓடி ஆடும் இடத்தையும் மாசுபடுத்தி அச்சுறுத்தக் கூடாது. இறந்தும் பழிசுமக்கவேண்டுமா?' என்று அந்த எண்ணத்தைத் தடுத்துவிட்டேன்.

கயிறு போதும் என்று எண்ணிய போதுதான் உண்மையிலேயே நான் கலங்கிவிட்டேன்.

நான் காணாது கிடக்கும் என்வயிற்றில் வளரும் உயிரை நினைந்தேன். இறந்துபோனால் அம்மாவும் அப்பாவும் உறும்வருத்தத்தை நினைந்தேன், தேம்பித் தேம்பி அழுதேன். அன்று ஒருநாள் நான் சிறு பெண்ணாக இருந்தபோது பள்ளிக்கூடத்தில் ஆடிக்கொண்டிருந்தவள் மயங்கி வீழ்ந்துவிட்டேன். அந்த நிலையிலேயே என்னை வீட்டுக்குக் கொணர்ந்தார்கள். விழித்து எழுந்தபோது அம்மா இருந்த நிலையைக்கண்டு நானே கலங்கிவிட்டேன். அழுது அழுது அவள் முகம் வீங்கிவிட்டது. வாய் பிதற்றிக்கிடந்தாள். வெறும் மயக்கத்திற்கே அந்த நிலையானால் நான் இறந்துவிட்டால் அம்மம்ம... அந்த நிலையையே என்னால் எண்ணிப்பார்க்க இயலவில்லை.

தற்கொலை வேண்டாம் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். என் வயிற்று உயிரைக் காப்பாற்றியே தீரவேண்டும் என உறுதிகொண்டேன்.

இனி இந்த வீட்டில் வாழமுடியாது என்பது நிச்சயமாகிவிட்டது. கணவரோ கோபத்தின் எல்லையில் நின்றுவிட்டார். ஓரகத்தியோ முற்றிலும் பகையாகி என்னைத் தொலைத்துவிட எண்ணிவிட்டாள். இந்த வீட்டில் ஓரகத்தியின் கணவர் ஒருவர்தான் துணை இருக்க முடியும் என்று எண்ணியபோது அந்த அவல நிலையிலும் எனக்குச் சிரிப்பு வந்தது. தனக்கே ஒரு துணை தேவை என்று இருப்பவர் எனக்கு எங்கே உதவப்போகின்றார் என்று சிரித்தேன்.

எது என்ன ஆயினும் சரி. அம்மாவிடம் போய்ச் சேர்ந்துவிடுவோம் என்று எண்ணியதும், உடலில் இருந்த சோர்வு எங்கோ பறந்து ஒழிந்தது. கணவர் தந்த அரைகளின் வலியும் தெரியவில்லை. எழுந்து நடந்தேன். முன்னே பழக்கப்பட்டவள் போல் விடுவிடு என்று நடந்தேன். தெருக்களைக் கடந்து தோப்புக்களைக் கடந்து ஊரின் எல்லையை வந்து அடைந்தபோது கிழக்கு வெளுக்கும் குறியாக வெள்ளி முளைத்திருக்கக் கண்டேன். இருள் அரசு செலுத்திய பின் ஒளிக்கும் இடம் இருக்கின்றது என்பதன் அறிகுறியாக வானத்திலே விடிவெள்ளி இருந்தது. என் வாழ்க்கையிலும் துன்ப இருள் தொலைந்து இன்ப ஒளி துலங்குமா என ஏங்கினேன். தொலையாத நெடுந் துயரமாக என் வாழ்வு ஆகிவிட்டதாக உணர்ந்தேன்.

தொடக்கத்திலே இருந்த ஊக்கமும் ஆற்றலும் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்ந்து வந்தது. கால்கள் நடக்கும்போது பின்னிக்கொள்வது போல் தோன்றின. சோர்வு மிகுந்தது; எங்கோ ஓரிரு காக்கைகள் கூவின. உழவர் சிலர் தோள் மீது கலப்பையைப் போட்டுக்கொண்டு முன்னே மாடுகளை ஓட்டிவந்தனர். அதைக்கண்டு ஏதோ ஊர் எதிரில் இருக்கின்றது என்று எண்ணினேன்.

அந்த நேரத்திலும் அவர்கள் "யார் அது?" என்று கேட்பதும், "யாரோ பாவம்" என்று இரங்குவதும் "தனியே ஏன் அம்மா போகிறாய்?" என்று வினவுவதும், "பார்த்துப் போ அம்மா. இருட்டு" என்று அறிவுறுத்துமாகத்தான் சென்றார்கள்.

முன்பின் தெரியாத அவர்கள் அறிமுக மில்லாதவளாகிய என்னிடம் காட்டும் பரிவுகூட கணவர்க்கும் பிறர்க்கும் இல்லாது போயிற்றே என வருந்தியவாறே நடந்தேன்.

"பார்த்துப்போ அம்மா. இருட்டு" என்று நடக்கிற வழிக்கு நாலு பேர் முறைசொல்லிக் கொடுக்கின்றார்கள். ஆனால் வாழுகின்ற வாழ்க்கைக்கு

வழி சொல்லுகின்றவர்களைத்தான் காணோம். வழி இருட்டாகக் கிடப்பது போல் சமுதாயம் இருளடர்ந்து கிடக்கின்றது. அந்தக் காரிருளில் நெறி காட்டும் நல்விளக்காக யார் இருக்கிறார்கள்? என் வாழ்வே இருண்டு விட்டது. அதில் பார்த்துப்போகத் தெரியாத நான் இந்த இருட்டில் பார்த்துப் போனால் என்ன பார்க்காமல் போனால்தான் என்ன என்று சலித்துக் கொண்டவாறே மெல்ல மெல்ல நடந்தேன்.

பின்னும் சற்றுநேரம் கடந்ததும் ஒரு பெரிய சாலையை வந்து சேர்ந்ததாக உணர்ந்தேன். அங்கே மேலும் நடக்க இயலாது சோர்ந்து உட்கார்ந்துவிட்டேன், ஒரு மரத்தின் கீழே.

சற்று நேரத்தில் ஒரு கார் வந்தது தெரிந்தது. வந்துகொண்டிருந்த காரின் விளக்கொளி கண்ணைப் பறிப்பதுபோல் இருந்தது. கைகளால் கண்ணை மூடிக்கொண்டேன். போய்க் கொண்டே இருக்கவேண்டிய அந்தக் கார் என் அருகில் நின்ற ஒலி கேட்டு நிமிர்ந்து பார்த்தபோது அதன் முன் இடத்தில் இருந்து ஒரு அம்மை இறங்கிவந்ததை உணர்ந்தேன்.

அந்த அம்மையார் நேரே என்னிடம்வந்து "ஏன்மா இங்கே தனியாக உட்கார்ந்திருக்கின்றாய்?" என்றார். அவர் யார் என்றே நான் அறியேன். என்னையும்யார் என்று அந்த அம்மையார்க்குத் தெரியாது. என்றாலும் வழியே போய்க்கொண்டிருந்தவர் காரிலிருந்து இறங்கி என்னைக் கனிவுடன் நோக்கினார். அவரைக் கண்டதும் என் மனதில் ஏனோ அமைதி பிறந்தது. அவரிடம் என் கதையைச் சொல்லி அழவேண்டும்போல்தோன்றியது. எல்லாம் சொன்னேன், கேட்டவர் பாகாய் உருகிப்போனார். 'ஐயோ பாவி' என்று இடை இடையே சொல்லிக்கொண்டிருந்தார்.

"கவலைப்படாதே அம்மா. நான் இருக்கின்றேன். எல்லாம் ஏற்பாடு செய்கின்றேன். இப்போது அவசரமாக வேலூர்க்குப் போகிறேன். திரும்பும்போது கட்டாயம் உன்னை வந்து பார்க்கிறேன். இந்தா என் முகவரி. நான் வராவிட்டாலும் கடிதம், எழுது. உன் முகவரியையும் கொடு நானும் எழுதுகிறேன்" என்று என் முகவரியை எழுதிக்கொண்டு தன் முகவரி அச்சடித்த துண்டு ஒன்றைக் கொடுத்தார்.

எந்தப் பக்கம் போகவேண்டும் என்று கேட்டு ஒரு பஸ்ஸில் ஏற்றிவிட்டுப் பணமும் கொடுத்துவிட்டுப் போனார். அந்த அம்மா உதவி இல்லை என்றால் நான் இன்னும் எங்காவது வெயிலில் அலைந்துகொண்டிருக்க வேண்டுமே.

இந்தக் கதை எல்லாவற்றையும் அம்மாவிடம் எப்படிச் சொல்வது? ஆனால் அவளோ கேட்டுக்கொண்டே இருக்கிறாளே. என்று எண்ணியபடியே தோட்டத்து வாயிற்படியை விட்டு எழுந்து உள்ளே வந்தேன்.

கவலை தோய்ந்த முகத்துடன் அம்மாவும் அப்பாவும் இடிந்து உட்கார்ந்திருக்கக் கண்டேன்.

"மனம் மனம்" என்று சொல்லுகின்றார்களே அது எங்கேதான் இருக்கின்றதோ தெரியவில்லை. கண்ணுக்குத் தெரிந்த உடல் உறுப்புகள் தரும் துன்பத்தையும் இன்பத்தையும்விட கண்ணுக்குத் தெரியாத அது தரும் இன்பமும் துன்பமும்தான் மிகுதியாக இருக்கின்றது. அதனுடைய இச்சைப்படியே நாமும் ஆடவேண்டி இருக்கின்றது,அதனால்தான்போலும் 'மனம்போல வாழ்வு' என்று சொல்லி இருக்கின்றார்கள். வேறுவேறு இடங்களில்போய் அலைவானேன். என் கதையையே பார்த்தால் விளங்குமே. கணவர் வீட்டில் நாள்தோறும் துன்பத்தில் கிடந்து தவித்த நான் இப்போது கவலையற்று வாழ்கிறேன். எந்தப் பெண்ணுக்கும் கணவனைவிட்டு வாழும் வாழ்வு இன்பம் தருவது அன்று. நாள்தோறும் குடித்துவிட்டு வந்து அடியும் உதையும் பரிசாகத் தந்து 'நாயே மூதேவியே' என்று அழைக்கும் கணவனையும் பெண்கள் மதித்துப் போற்றுகின்றனர். அடியிலும் உதையிலும் கழிந்த நேரம்போக எப்போதோ ஒருமுறை கிட்டும் அன்பை நம்பி அவர்கள் வாழ்வு நகருகின்றது. அந்த நம்பிக்கையே பலருடைய வாழ்க்கையின் இன்பத்திற்குக் காரணமாக இருக்கின்றது. நான் முன்பு படித்த அந்தப் பண்டோராவின் கதையிலும் இந்த நம்பிக்கையைப்பற்றிய குறிப்பு வருகின்றது. முதல்முறை திறந்தபோது துன்பத்தின் உருவங்களான நச்சுப் பூச்சுகளும் வண்டுகளும் வெளிப்பட்டது போல் இரண்டாம் முறை திறந்தபோது நம்பிக்கை தோன்றியதாம் மனித உருவில்.

நானும் எவ்வளவோ நம்பிக்கையுடன்தான் இருந்தேன்,கணவருடன் நல்லபடி வாழலாம் என்று. ஆனால் என் நம்பிக்கை துளிர்ப்பதற்கே வழியின்றி நசித்துப்போயிற்று. வேறு வழி இன்று உயிர்போன்று இணைந்து

"இஸ்லாம் மதத்தின் ஸ்தாபகருடையதைப்போன்ற வியப்பூட்டும் வரலாறு வேறொன்றில்லை. உலகின் விதியையே மாற்றியமைத்த மனிதரும் அவரைப்போல் வேறொருவரில்லை"
—E. E. கெல்லட்

இருக்க வேண்டிய கணவரைவிட்டுப் பிரிந்து இங்கே கிடக்கின்றேன்.

கணவர் என்னிடம் அன்பாக நடந்துகொண்டு ஆறுதல் காட்டி இருந்தால் அவரைப் பிரிந்து இங்கே இருப்பது துன்பமாகத்தான் இருந்திருக்கும். அப்பாவையும் அம்மாவையும்விட எனக்கு அவரிடம்தாம் ஆறுதல் கிடைத்து வந்தது. அதெல்லாம் பழைய கதையாக இரவின் மயக்கத்தில் கண்ட கனவாக முடிந்துவிட்டது. இன்று எனக்குக் கணவரைப் பிரிந்து வாழ்வதில் துன்பமே காணோம். என் மனம் அந்த அளவிற்கு மாறிவிட்டது. மரத்துப்போய்விட்டது என்றுகூடச் சொல்லலாம். கொல்லன் உலைக்களத்தில் முதன் முதலாக வேலை பழகும்போதுதான் நெருப்புப் பொறிகளைக் கண்டு அஞ்சுவார்களாம். நாளடைவில் அது இயல்பாகிவிடுமாம். அதைப்போல் முதன் முதலிலே வாழ்க்கை என்ற கொல்லன் உலைக்களத்தில் புதிதாகப் பழகிய எனக்குக் கணவரின் புறக்கணிப்பு ஒரகத்தியின் கொடுமை என்ற நெருப்புப் பொறிகள் அச்சம் தந்தன. ஆனால் இன்று பழகி மரத்துப் போனவளாய் கணவரைப் பிரிந்து கிடக்கின்றபோதும் கலங்காமல் வாழ இயலுகின்றது.

பழுக்கக் காச்சிய இரும்போடு பழகும் கொல்லனும் சிறுபொறிகளுக்குமாறாக எப்போதோ ஒருமுறை தெறிக்கும் பெரும் பொறியைக் கண்டு கலங்கிவிடுவது உண்டு. அதேபோல் நானும் சிறுசிறு நினைவுகளினால் சலனமின்றிக் கிடந்தாலும் துன்பம் பெருஞ்சுமையாக மாறிடும்போது கலங்கிவிடுவது உண்டு. நெருப்புப் பட்ட புண்ணுக்கு இடும் களிம்புபோல் பெருந் துன்பங்களால் நான் தவித்திடும்போது என் மனத்தைத் தேற்றி நிலை நிறுத்தியவை இரண்டு. ஒன்று அன்று காரில்வந்து உதவிய அம்மையார். மற்றொன்று என் வயிற்றுள்

வளர்ந்து கலிதீர்த்து வரும் என் குழந்தை மணிமேகலை.

காரில் வந்து உதவிய அந்த அம்மையை நான் மீண்டும் சந்திப்பேன் என்று நினைக்கவே இல்லை. ஏதோ வழியில் கண்டதற்கு ஆறுதலாக இரண்டு சொற்கள் பேசினார்கள், அவ்வளவுதான். இனி அவர்களைக் காணுவோம் என நினைக்கக்கூடாது என்று எண்ணினேன். அதனால்தான் அவர் கொடுத்த முகவரிச் சீட்டையும் எங்கேயோ வைத்து மறந்துவிட்டேன்.

ஆனால் அந்த அம்மையார் என்னை அப்படி மறக்கவில்லை. இரண்டு மூன்று நாட்களுக்குப் பின்னர் எங்கள் வீட்டெதிரே ஒரு கார் வந்து நின்றது. யார் என்று எட்டிப்பார்த்த நான் வியப்பில் மூழ்கினேன். பரபரப்பாக ஓடி அவரை வரவேற்று உபசரித்தேன். அம்மாவுக்கும் அப்பாவுக்கும் அறிமுகப்படுத்தி வைத்தேன்.

“தங்கம் எல்லாம் சொன்னாள் அம்மா. ஏதோ எங்கள் பேறு. உங்களைப் போன்றவர்கள் துணை கிடைத்தது. நாங்கள் என்ன செய்யப் போகிறோம் பதிலுக்கு?” என்றார் அப்பா.

“பதிலுக்கு என்னங்க செய்வது. இதெல்லாம் ஒருவர்க்கொருவர் செய்யவேண்டிய கடமை”

“எல்லோரும் எண்ணாவிடினும் சிலராவது எண்ணுகின்றார்கள். அன்று தங்கத்தைக் கண்டதும் எனக்கு இரக்கம் மிகுந்தது. வேலூரில் அவசரமான வேலையிருந்ததால்தான் நேரே போய்விட்டேன். இல்லையானால் உடன் அழைத்துவந்து விட்டிருப்பேன்” என்றார் அந்த அம்மையார்.

இவ்வளவு தூரம் எனக்கு உதவி செய்து அன்பாகப் பழகும் இவர்கள் யார் என்றே தெரிந்துகொள்ளவில்லையே என்று வருந்தினேன். ‘நீங்கள் யார்? என்ன வேலை?’ என்றெல்லாம் அவரையே கேட்பதும் நாகரிகமாகத் தெரியவில்லை. என்னதான் செய்வது என்று திகைத்துக்கொண்டிருந்த போது அந்த அம்மையாரே “எல்லாம் சரி, நான் யார் என்றே உங்களுக்குத் தெரியாது அல்லவா? நீங்களும் கேட்கவில்லையே!” என்று சிரித்தார்.

அந்தச் சிரிப்பில் வெள்ளை உள்ளத்தின் சாயல் தெரிந்தது.

(தொடரும்)


# HOME LAND

அனுமதி கிடைத்துவிட்டது!

அன்பர்களின் ஆதரவு கிடைத்து வருகிறது!

ஆரம்ப வேலைகள் நடைபெறுகின்றன!

# HOME LAND

ஜனவரித் திங்களில் வெளிவருகிறது

நீண்ட காலத் தேவையை நிறைவேற்ற!

திராவிடத்துக்குப் பிற இடத்து தொடர்பு கிடைக்க!

பகுத்தறிவுத் துறைக்குப் பணியாற்ற பவனி வருகிறது

# HOME LAND

திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிரோட்டம் உலகு அறியவும்,

உலகின் பல்வேறு இடங்களிலே காணப்படும் உயிரோட்டப் பிரச்சினைகளைத் திராவிடம் அறியவும்,

# HOME LAND

கிளேஸ் காகிதத்தில் டிம்மி 8 பக்க அளவில்

கட்டுரை, கவிதை, கதை, கடிதம், உரையாடல்

எனும் வண்ணங்களுடன் வெளிவரும்.

- ★ எண்ணம் வடிவெடுக்க
- ★ ஏட்டின் எழில் பூத்திட
- ★ ஆண்டுச் சந்தா ஏழு செலுத்தி ஆதரவுதாருங்கள்
- ★ விரைந்து செயலாற்றுங்கள்.

# HOME LAND

# செய்திகள்

## அப்போது கேட்டதற்கு!

மத்திய சர்க்காரில் மந்திரியாக இருக்கும் தியாகி, நீண்டநாட்களுக்கு முன்பே மந்திரி வேலை தரச்சொல்லிக் கேட்டார்; அப்போது கேட்டதற்கு, தரமுடியாது என்று கூறிவிட்டார்கள்! தியாகியே இந்தச் சம்பவத்தைக் கூறியிருக்கிறார்.

கல்லூரியில் தியாகி படித்துக்கொண்டிருந்தபோதுதான் மந்திரியாக வேண்டுமென்று கேட்டார்— **நாடகத்தில்!** அவருடைய வேண்டுகோள் அப்போது மறுக்கப்பட்டுவிட்டதாம்.

நாடகத்தில் 'ராஜா' வேஷம் கேட்டாராம், முடியாது என்றார்களாம், 'ராணி' வேஷம் கேட்டாராம் கிடைக்கவில்லையாம், மந்திரி வேஷமாவது கொடுங்கள் என்று கேட்டாராம், முடியாது என்றார்கள், கடைசியில் தியாகிக்கு, அந்த நாடகத்தில் மிட்டாய்க்காரன் வேஷம் தரப்பட்டதாம்.

அப்போது மந்திரிவேலை கேட்டதற்கு, தியாகிக்கு, இப்போதுதான் கிடைத்தது; வேறு நாடகசபாவில்!

*

## போட்டி போட்டுக்கொண்டு......!

நேபாள நாட்டுக்கு, 'யோகம்' என்றுதான் சொல்லவேண்டும்! அந்தச்சிறியநாடு, 'எல்லை நாடாக' இருப்பதாலே, இருபுறம் அமைந்துள்ள நாடுகளும், அதன் நேசத்தைப்பெற பந்தபாசம் காட்டுகின்றன—போட்டி போட்டுக்கொண்டு உதவிகள் அளித்து உறவுகொண்டாடுகின்றன. 'இந்தியா' தன் நிலைமையைச்சீராக்கிக்கொள்ளவே கடன் கேட்டுக்கொண்டிருக்கிறது, இந்த நிலையிலும், நேபாள நாட்டுக்கு உதவி செய்து உபசாரம் காட்டுகிறது. திரிசூலி அணைத்திட்டத்துக்கு 3-கோடி ரூபாய் தரவும் சம்மதித்திருக்கிறது, மற்றொர் புறம் இருக்கும் சைனுசும்மா இல்லை, கோடிக் கணக்காகப் பணம் கொடுத்து, நேபாள நாட்டு உறவு பிடிக்க திட்டமிட்டுப் பணியாற்றுகிறது. மொத்தத்தில் ஆறு கோடி ரூபாய் தர, சைனு திட்டமிட்டிருக்கிறது. ரொக்கமாகவே இரண்டு கோடி ரூபாய் தருகிறது! நாலு கோடி ரூபாய்க்கு, சாமான்கள் தருகிறது! இரு பெரும் இடங்களிலிருந்து போட்டிபோட்டுக்கொண்டு உதவி கிடைக்கிறது—நேபாளத்துக்கு, நேபாள நாட்டினுடைய சுதந்திரத்துக்கு ஒரு துளியும் குந்தகம் விளையாது என்றுவாக்குறுதியும் அளிக்கிறது.

*

## துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

நவம்பர் 15-லிருந்து இந்தியா எங்கணுமுள்ள துறைமுகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்காகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. கல்கத்தாவில் இது சம்பந்தமாக நடைபெற்ற மகாநாட்டில், ஒரு செயல் கமிட்டியும் அமைக்கப்பட்டிருக்கிறது.

*

## பாடம் புகட்ட!

எதேச்சாதிகார வெறிபிடித்து போரை மூட்டிவிடும் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் பாடம் புகட்ட, பஞ்சசீலம்பற்றிப் பேசிக்கொண்டும், எகிப்துக்கு ஆதரவுத் தீர்மானம் நிறைவேற்றியும், காலத்தை ஓட்டுவது போதாது என்று டாக்டர் லோஹியா மைசூரில் ஓர் பொதுக்கூட்டத்தில் எடுத்துரைத்துவிட்டு, பிரிட்டன்—பிரான்சு ஆகிய நாடுகளின் போக்கைக் கண்டிக்க,

சாம்ராஜ்ய அமைப்பிலிருந்து இந்தியா வெளி ஏறவேண்டும்.

பிரிட்டிஷ் பிரன்ச்சு சாமான்களை விலக்கவேண்டும்.

பிரிட்டிஷ் — பிரன்ச்சு கப்பல்களில், சாமான்கள் ஏற்றவோ, இறக்கவோ தொழிலாளர்கள் செல்லக்கூடாது

என்று திட்டத்தை வலியுறுத்தினார்.

*

## "தோழரே!"

இலக்கியத்திலேயும், உலக வரலாற்றிலேயுங்கூட உன்னதமான பொருட் செறிவுள்ளது என்று போற்றப்படும் 'தோழர்' என்ற பதத்துக்கு ஆபத்து வந்திருக்கிறது!!

"தோழரே!" என்று ஒருவருக்கொருவர் அன்புடன் அழைக்கும் முறை கசப்பாகிவிட்டது, போலந்தில். போலீஸ் இலாகாவிலும், பட்டாளத்திலும், தோழரே! என்று அழைத்துக்கொள்வது இனிக்கூடாது என்று புடாபெஸ்ட் ரேடியோ செய்தி அறிவித்திருக்கிறது. போலீஸ் பாஷையில் தோழர் என்பதற்கு, குறிக்கப்படும் சொல், ஏல்வ்டார்ஸ் என்பது. டார்ஸ் என்றால் நண்பன் என்று பொருள்; எல்வ் என்றால் கொள்கை என்பது பொருள்; எனவே எல்வ்டார்ஸ் என்றால் கொள்கையால் நண்பரானோர்—தோழர்—என்று பொருள் கொள்ளப்பட்டது. இனி, போலந்தில், எல்வ்டார்ஸ் என்று அழைக்கக்கூடாதாம்; பாஜ்டார்ஸ் என்ற பதம் பயன்படுத்தப்படவேண்டுமாம். பாஜ் என்றால், கஷ்டம், தொல்லை, என்பது பொருள்; கஷ்டத்தில் உதவுபவன், கைகொடுக்கும் நண்பன் என்பது பொருளாகிறது.

தோழரே! என்ற இனிமை பயக்கும் சொல்லைக்கூட கசக்கிறது என்று கருதும் அளவுக்கு போலந்தில் புதுநிலை வளரக் காரணம் யாதோ!!

*

## அமெரிக்காவுக்குக் கிராக்கி!

"அமெரிக்கா" என்ற வாரப் பத்திரிக்கையை அமெரிக்க அரசாங்கம் ருஷிய மொழியில் வெளியிடுகிறது. அக்டோபர் 22ந் தேதி முதன்முதலாக அது வெளியிடப்பட்டபொழுது, ரஷியர்கள் போட்டியிட்டு வாங்கி, ஆவலுடன் அதைப் படித்தனராம். பத்திரிக்கை வந்திறங்கிய ஒரு மணி நேரத்துக்குள் பிரதிகளெல்லாம் செலவழிந்துவிட்டன. "அமெரிக்கா" வார இதழில் ஐம்பதினாயிரம் பிரதிகள் ஒவ்வொரு வாரமும் ருஷியாவில் விற்கப்படுமெனத் தெரிகிறது.

★




இது திருவள்ளுவரின் கேள்வி. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்மக்களிடையே தோன்றி வாழ்ந்த ஒரு தமிழறிஞரின் கேள்வி. உள்ளம்வெதும்பி, புழுங்கி வெறுப்படைந்த தமிழர் தந்தையின் கேள்வி. பதைபதைத்துத் துடிதுடித்து, குமுறிக்கொண்டிருக்கும் இன்றைய தமிழ் நாட்டினர்க்கு அந்த நாளிலேயே வழி வகுத்து இடித்துரைத்த வள்ளுவப் பெருமானின் கேள்வி.

மனிதனாகப் பிறந்தால் வயிற்றை வளர்க்க எந்தத் தொழிலையாவது செய்து வாழ்ந்தால் போதும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறதே ஒரு கூட்டம்—கேவல மனப்பான்மைகொண்ட அந்த மக்கள் கூட்டம்—அந்தக் கூட்டத்தின் தலையில் ஓங்கிச் சம்மட்டியால் அடித்து 'உண்மையினை உணர்ந்துகொள்' என்று அரிய நீதியினை—தமிழர் உள்ளத்தினை — அன்றே திறந்து காட்டி வைத்தார் நமது ஆசிரியர் வள்ளுவனார்.

ஒழுக்கமென்று ஒன்று உண்டு என்பதைக் கனவிலும் நினைக்காது மனிதனுக்கு உயிரைவிட மேலான மானம் என்பதையும் விட்டுக் கேவலத் தொழிலிலேயே புரண்டு கொண்டிருக்கும் மகனொருவன் வெள்ளையும் சள்ளையுமாகக் காட்சியளித்து நிற்க, அவனையே உயர்நிலை மகன் என்று எண்ணுகிற பேதைமையினை எங்கு போய்ச் சொல்லுவது! உடல் வலியினால் நெற்றிவியர்வை நிலத்தில் விழ உழைத்துச் சம்பாதிக்கும் உழவனையும், பாட்டாளி மகனையும் தாழ்ந்த தொழில் செய்பவன் என்று எண்ணுகிற—பேசுகிற—மூடத்தனம் கூட நம் நாட்டில் இருந்தது — இருக்கிறது— பரவியுள்ளது என்று சொல்லிவிட்டால், பிறகு அதிகம் பேசுவானேன்? இக்கொடுமையினையும், மக்களை மக்களாக மதிக்காத கூட்டத்தினையும் ஒதுக்கித் தள்ளாது வாழும் மகனைப் பார்த்து 'உனக்கு ஏன் இந்த வாழ்வு?' என்று கேட்பதில் எவ்வளவு உருக்கமான ஆழ்ந்த பொருள் உள்ளது என்பதை ஒவ்வொரு பகுத்தறிவு வாதியும் சிந்திக்காமல் போகான். ஆசிரியரின் உள்ள எழுச்சியும், வேகமும் எப்படிப் பேசுகின்றனவென்பதை உயிரோட்டச் சொற்களில் விளக்குகின்ற குறட்பாக்கள் நமக்கு எளிதில் புகட்டிவிடுகின்றன.

ஒருவனுடைய உயர்விற்கும் தாழ்விற்கும் அவனவன் மானம் விடாமலும் விட்டும் செய்கின்ற செயல்களே அளவு கோலாகக் கொள்ளப்படவேண்டுமேயன்றி, பிறப்பினைக்கொண்டு உயர்வு தாழ்வு வகுத்தலும், அதை ஒப்புக்கொண்டு வாழ்க்கையினை நடத்துதலும், வடிகட்டிய முட்டாள்தனமென்பதைத் தமிழர்களின் அடிப்படையான அறம் நன்கு எடுத்துரைக்கும். ஆசிரியர் வள்ளுவனார் வகுத்துக் காட்டியதும் அதுவே. இது இப்படியிருக்க, மனிதனை மனிதன் தாழ்த்திக் கூற அதனையும் சகித்துக்கொண்டு வாழ்க்கை நடத்துகிறானே ஒருவன்—ஒரு நடக்கும் பிணம்—அவனைப் பார்த்து ஆசிரியர் என்ன கூறுகிறார்? உன்னைப் பார்த்து மற்றொருவன் 'என்னருகில்வராதே, என்னைத் தொடாதே (அல்லது) என்னிடத்தில் ஒட்டிக்கொள்ளாதே என்று பேசுவானேயாகில், அவனை உன்னுடைய பகைவன் என்று முதன் முதலில் முடிவு கட்டிக்கொள் என்கிறார். அப்படி இகழ்ந்து பேசுபவனிடத்தில் "நீ எதற்காகப் பின்சென்று பழக வேண்டும்?" என்று சுருக்கென்றுதைக்கும் சொற்களால் இடித்துரைக்கிறார். அப்படி இகழ்ந்து பேசுபவனிடத்தில் சென்றால்தான், தனது வாழ்க்கை நடந்துவரும் போல் இருக்கிறதே என்று ஒரு சிலர் காரணத்தையும் கூறிக் கொள்ளலாம். "என்னிடம் ஒட்டிப் பேசாதே—தொட்டுப் பேசாதே —சேர்ந்து பழகாதே—" என்று ஆணவத் திமிர்பிடித்த கூட்டம் பேச, அந்த வார்த்தைகளையும் பொறுத்துக்கொண்டு நடக்காவிட்டால், வாழமுடியாதே என்று ஒருவன் சொல்லவந்தால், அப்படிப்பட்டவனை தன் முன்னே நிறுத்திக்கொண்டு ஆசிரியர், "உனக்கு ஏன் இந்த வாழ்வு? இன்றே உயிரை விட்டு இறந்து போ" என்று உள்ளம் பதைக்கக் கூறிவிடுகின்றார்.

ஒருவன் மற்றவனைக் காரணமின்றி இகழ்ந்து பேசுவதற்குப் பல காரணங்கள் இன்று நாட்டிடையே மலிந்து கிடக்கின்றன. அக்காரணங்களுள் தலையானது, சாதி வேற்றுமைக் கொடுமை, தமிழ் நாட்டிடையே புகுத்தப்பட்ட கொடும் பழக்கங்களுள் இதைவிடக் கொடுமையானது வேறொன்று இருப்பதாக நமக்குத் தோன்றவில்லை. இதனைக் கண்டு அந்த நாளிலேயே கனல் கக்கும் சொற்களில் கண்டித்தவர், நமது ஆசிரியர் வள்ளுவர் ஒருவரே தான். இந்தக் கொடுமையினைப் புகுத்திய கயவர்களை, ஆசிரியர், 'நமது பகைவர்கள்' என்றே கூறிவிடுகின்றார். ஏன் பகைவர்களானார்கள்? பிறரைத் தம்மோடு ஒட்டவிடாதவர்கள்; நெருங்கவிடாதவர்கள். சேர்ந்து வாழ விரும்பாதவர்கள், எனவே அவர்களைப் பகைவர் என்பதில் என்ன ஆச்சரியம் இருக்கின்றது. பொருத்தமான ஒரு சொல்லினைப் பொறுக்கி 'ஒட்டார்' என்று அவர்களை அழைக்கின்றார்.

இந்தப் பகைவர், 'ஒட்டார்' என்ற கூட்டம் எது என்பது

நமக்கு விளங்காமல் போகிறதா? இது இப்படியிருக்க, இந்தக் கூட்டத்தின் பின்னும், இழி சொற்களை வாங்கிக் கட்டிக்கொண்டு, ஓடிக் கொண்டிருக்கிறானே தமிழ் மகன் அவனைப்பார்த்துத்தான் ஆசிரியர் கவலைப்படுகின்றார். 'ஏனப்பா உனக்கு இப்படிப்பட்டவாழ்க்கை?' என்று நயமாகக் கேட்டு வைக்கின்றார். 'என்னுடைய வயிற்றுப் பிழைப்பு நடக்க வேண்டியிருக்கிறதே'—என்று அவன் கூசாமல் ஈனபுத்தியில் பதில் சொல்ல வந்தால் "நீ அப்படி வாழ்வது, உனக்கும், உன் மக்களுக்கும் நீங்காத பழியும் கேவலமும் ஆகும்" என்று அறிவுரை புகட்டிச் செல்லுகின்றார். அப்படி ஒருவன் வாழ்வதைவிட "கெட்டான் எனப்படுதல் நன்று" என்று முடிவுகட்டிவிட்டார். இறந்தேவிட்டான் என்ற செய்தி இன்பத்தைத் தரும் என்கிறார்; "ஒட்டார் பின் சென்று ஒருவன் வாழ்தலின்" என்ற சொற்கள் ஆசிரியர் உள்ளத்தில் புண்பட்டெழுந்த ஒலிகளேயாகும் என்பது வெளிப்படை. அப்படி ஏன் வாழவேண்டும் என்பதைப் பன்முறை நாம் சிந்திக்கவேண்டும் என்பதே ஆசிரியன் ஆசை. அந்தபடியான வாழ்க்கை உண்டாகுமேயானால், அந்தக்கணமே இறந்துவிடு என்ற துடிப்புடன் சொல்லவேண்டி, "அந்நிலையேகெட்டான், எனப்படுதல் நன்று" என்ற சொற்களை அடுக்கிக்காண்பிக்கிறார். தமிழ் மக்களின் இவ்வுயரிய பண்பாட்டினை, மிக எளிய சொற்கள் குறள் வடிவில் நின்று எடுத்துரைக்கின்றன.

ஒட்டார் பின் சென்று ஒருவன்
வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று.

[ஒட்டார் பின்-தன்னை இகழ்ந்து பேசுபவர்களின் பின்னே, சென்று—போய், ஒருவன் வாழ்தலின்—ஒருவன் வாழ்க்கையினை நடத்துவதைவிட, அந்நிலையே—அப்படிப்பட்ட வாழ்க்கையினை நடத்தாது அந்தக்கணமே, கெட்டான் எனப்படுதல் — இறந்துவிட்டான் என்பது, நன்று—நல்லதும், மேன்மையுமாகும்.]

—"பொன்னி"

★

# பாரதி இருந்திருந்தால்

[வித்துவான் கு. அமிர்தலிங்கம்]

—::—

பாரதியை வாழ்த்துகின்றார் பலவணக்கம்
பாடல்களைப் பாடுகின்றார் பரவசந்தான்
சீருடனே உருவமதற் கழகுதந்தார்
சிந்தனைக்கு மாறில்லை அதனாலென்ன
பாரதிரப் பாடிடுவோம் பாடலெல்லாம்
பல்வகையாக் கவிதன்னைப் புகழ்ச்சிசெய்வோம்
ஊராரே நாட்டாரே உன்னிப்பாரீர்
இம்முறை அப்பாரதிக்கு இன்பம்நல்கா!

தனிவொருவனுக் குணவின்றேல் தரணிவிழத்
தைரியமோ டெதிர்த்திடுவோம் எனமுழங்கித்
தினவெடுத்துத் தோள்தட்டத் தீட்டிச்சென்றான்
திறமுடனே அறமிக்க சிந்தைகேட்டான்
கனவதனை நனவாக்கக் கருதியிங்கே
கண்டதென்ன உளந்தொட்டுக் கூறப்போமோ
இனமனிதர் இரவென்றது உழைத்துழைத்தே
வதைகின்றார் அதைப்போக்க வழிகண்டோமா?

வீதிக்கோர் பள்ளியென்று விளம்பிச்சென்றான்
விட்டிடுங்கள் ஊருக்கோர் பள்ளியுண்டா?
சாதிமதம் பிணக்கொழிய வேண்டுமென்றான்
சாதித்த அளவென்ன சரிபோகட்டும்
பாதிஇவள் வாழ்க்கையிலே பங்கிடுங்கள்
பணவுரிமை மனவுரிமை எனப்பகர்ந்தான்
மாதரார்க் கவ்வுரிமை தாராதின்று
மழுப்புகின்றோம் காரணங்களொன்றுங்காணோம்.

மந்திரத்தால் மாங்கனிகள் வீழாவென்றான்
மந்திரங்கள் மாய்ந்தனவோ அன்றியந்தத்
தந்திரந்தான் யாதேனும் தந்ததுண்டோ?
தாழ்வாகக் கேட்கின்றேன் சிந்தியுங்கள்
சந்தியிலே சிரிப்புமுகம் காட்டிவிட்டே
அந்தியிலே பணவேட்டை யாடச்செல்லும்
இந்தியர்க்கா சுதந்திரத்தை வேண்டுமென்றான்
இருந்திருந்தால் அவனுளந்தான் என்னஆமோ?

# சமதர்மச் சீமான்கள்

"இந்தியாவில் உள்ள ஒவ்வொருவரும் தன்னை ஒரு சோஷியலிஸ்ட் என்று கூறிக் கொள்கிறார்கள். சமதர்மம் என்பது குழப்பமானதும், தெளிவற்றதுமான கொள்கையாக ஆக்கப்பட்டுவிட்டது. சமதர்மக் கொள்கைக்குத் தெளிவான விளக்கத்தைத் தரவேண்டியது நமது கடமையாகும்" என்று பம்பாயில் கூடிய ஆசிய சோஷியலிஸ்ட் மாநாட்டில் தோழர் அசோக்மேத்தா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவது உலகப்போருக்குப் பின் உலகில் பல பகுதிகளிலும் சமதர்மக் கோட்பாட்டுக்கு மக்களிடை ஆர்வம் பெருகியுள்ளது. இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி, பர்மா, இந்தோனேசியா, முதலிய பல நாடுகளில், சமதர்மத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கட்சிகளுக்கு மக்களின் ஆதரவு கிடைத்து வருகிறது. சமதர்மம் தவிர்க்க முடியாத, தடுக்க முடியாத அரசியல் கொள்கையாகிவிட்டது. பழுத்த முதலாளி நாடுகள்கூட, சமதர்ம முறையை ஆதரிக்க முடியவில்லை என்றாலும், பலமாக எதிர்க்கும் ஆற்றலற்று இருக்கின்றன. சமதர்மத்தை எதிர்த்து நிற்பது, கரைபுரண்டோடும் கால வெள்ளத்தை எதிர்த்து நிற்பது போன்றதாகிவிட்டது.

உலகச் சூழ்நிலையில் சமதர்ம முறையில் ஆதரவு பெருகி வருவது கண்ட இந்தியக் காங்கிரஸ் கட்சியும், ஆவடி மாநாட்டில் சமதர்ம முறையே காங்கிரசின் நோக்கமென அறிவித்தது. அதிலிருந்து, நேரு பண்டிதர் பேச்சிலும் மற்றும் பல காங்கிரஸ்காரர்கள் பேச்சிலும் "சமதர்ம முறை, சமதர்ம வழி" என்ற சொற்கள் அடிக்கடி உபயோகப்படுத்தப்படுகின்றன. இந்த பேச்சுகளைக் குறிப்பிட்டுதான் தோழர் அசோக் மேத்தாவின் பேச்சு இருக்கிறது.

சமதர்மமுறையை மேற்கொண்டதாக காங்கிரஸ் கூறியபோதிலும்— அது காங்கிரஸ்கூட அல்ல, பண்டித நேரு சொல்வதாகும்—காங்கிரசில் இருப்பவர் சமதர்ம முறையை ஆதரிப்பவர்களாகக் காணப்படவில்லை. சமதர்மக்கொள்கைக்கு, சமதர்ம முறைக்கு யாரார் கடுமையான பகைவர்களோ அவர்களெல்லாம் காங்கிரசின் ஆதரவில் இருக்கிறார்கள். பெரும் முதலாளிகளும், ஆலையரசர்களும் காங்கிரசை வெறுத்தொதுக்கி வெளியேறவில்லை, சமதர்மத் திட்டத்தைப் புகழ்ந்திடும் காங்கிரஸ் தலைவர்களும் அவர்களை வெளியேற்றவில்லை. சமதர்மத் தீர்மானத்தைக் காங்கிரஸ் ஒருபுறம் நிறைவேற்றுகிறது; மற்றொரு பக்கம் கள்ளமார்க்கட் காரர்களையும், கொள்ளைலாபக்காரர்களையும் தனது கட்சியமைப்புக்குள் வருந்தி அழைத்துக்கொள்கிறது. அதிலும் தேர்தல் நெருங்கநெருங்க பணம் படைத்தவர்களுக்கு காங்கிரஸ் "மார்க்கட்டில்" மதிப்பு உயர்ந்து வருகிறது. மக்களிடைப் பிரசாரம் செய்ய சமதர்மக் கொள்கை பயன்பட்டபோதிலும், தேர்தலில் செலவு செய்ய சீமான்களின் பணமும் செல்வந்தர்களின் செல்வாக்கும் காங்கிரசுக்குத் தேவைப்படுகிறது. காங்கிரஸ் சமதர்மக் கொள்கைத் தீர்மானத்தைப் பற்றிப் பேசியபோதிலும், லட்சாதிபதிகள்தாம் காங்கிரசின் தேர்தல் விபரத்தை நிர்ணயிக்கிறார்கள். சமதர்மம் என்ற அருமையான கொள்கை காங்கிரஸ் கட்சியால் கேலிக்கூத்தாக்கப்படுகிறது.

டாட்டாவுக்கு நாற்பது கோடி ரூபாய் உதவிவிட்டு, பிர்லாவின் விருந்தில் கலந்துகொண்டு, ஆலை முதலாளிகளின் சங்க ஆண்டு விழாவுக்கு ஆசிச் செய்திகள் அனுப்பிவிட்டு, கோயங்காப் பத்திரிக்கை பாராட்டுதலைப் பெற்று, பின் மேடைக்கு வந்து சமதர்மத் திட்டத்தைப்பற்றிப் பேசினால், மக்களுக்கு "இது என்ன வகை சமதர்மம்!" எனச் சமதர்மக் கொள்கை மீதே குழப்பம் வந்துவிடுகிறது. இதுவரை அரசியல் அறிவுடையோர் சொல்லி வந்த சமதர்மக் கொள்கை பற்றிய குழப்பம் மக்களுக்கு உண்டாகும் போலிருக்கிறது.

காங்கிரஸ் அரசாங்கம் போடும் திட்டங்களும், இயற்றும் சட்டங்களும், முதலாளிகளுக்கு ஆதரவாகவே இருக்கிறது. சில சமயங்களில் தவிர்க்கமுடியாத நிலையில் சில சட்டங்கள் இயற்றப்பட்ட போதிலும், நடைமுறையில் அவற்றின் நோக்கம் கைவிடப்படுகிறது. ஜமின்தாரி ஒழிப்புச் சட்டத்தைக் காங்கிரஸ் கொண்டுவந்தார்கள். சட்டத்தைப்பெயரளவுக்குப் பார்த்தால், ஜமின்தார்களை ஒழிப்பதற்காகச் சிறந்த திட்டம் போலும் எனத் தோன்றும், ஆனால் நடந்ததென்னவென்றால், நலிந்து போயிருந்த ஜமின்தாரர்களுக்கு இந்தச் சட்டம் புதிய வலிவைக் கொடுத்தது. கையில் சரியான பணமின்றி, தரிசு நிலங்களை வைத்து சமாளிக்க முடியாமல் திணறிக்கொண்டிருந்த பல ஜமின்தாரர்களுக்கு, அரசாங்கம் "நஷ்ட ஈடு" என்ற பெயரில் பணம் கொடுத்து, புது முதலாளிகளை உண்டாக்கியது. ஜமின்தார்கள் என்பது போய், தங்களுக்குக் கிடைத்த பணத்தை வைத்துக் கொண்டு அவர்கள் தொழில் துறையில் புகுந்து, புதிய தொழிற்சாலைகளை உண்டாக்கி, எதிர்பாராத வருவாயைப் பெற்றிடும் முதலாளிகளாக்கிவிட்டது. இவ்வாறு ஜரிகைத்தலைப்பாகை ஜமின்தாரர்களெல்லாம் கதர்க்குல்லாய் போடும் முதலாளிகளாகிவிட்டனர். இருக்கிற முதலாளிக்கூட்டம் போதாதென்று, புது முதலாளிகளும் அரசியலில் ஆதிக்கம் பெறுகின்றனர், அத்துடன் சமதர்மத் திட்டத்தைப் பாராட்டிப் பேசுகின்றனர்.

சமதர்மம் என்ற பெயரைச் சொல்லி, மக்களின் ஆதரவைப் பெறலாம் என்று காங்கிரஸ் நினைக்கிறது; செயலில் சீமான்களையும் செல்வந்தர்களையும் ஆதரிக்கிறது. சமதர்மக் கொள்கையின்பால் உண்மையான பற்றுள்ளோர், தோழர் அசோக் மேத்தா அவர்கள் சொல்லியவாறு, சமதர்மம் பற்றி எழுந்துள்ள குழப்பத்தை நீக்கி, காங்கிரஸ் பேசிவரும் போலிக்கொள்கையை முறியடித்து, தெளிவான சூழ்நிலையை அரசியலில் உண்டாக்க வேண்டும்.

—

திராவிடநாடு

மலர் 15 | 18-11-56 | இதழ் 20

# அந்த இரண்டு!

மூன்றே மூன்று தொல்லைகளால் உலகமே அல்லலுக்கு ஆளாகின்றது என்று டில்லியில் நடைபெற்ற ‘கொழும்பு நாடு’களின் மாநாட்டில் கலந்துகொண்ட பர்மியப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். நாட்டுக்கு நாடு ஏற்படும் இராணுவ ஒப்பந்தங்களும், காலனி ஆதிக்கமும், பொருளாதார ஏற்றத்தாழ்வும் ஆகிய மூன்றுமே அவர் குறிப்பிடும் தொல்லைகள்.

பர்மியப்பிரதமரின் கருத்தை நாமும் ஏற்கிறோம்!

சீடோ என்றும் நேடோ என்றும்மேடோஎன்றும் செய்யப்படும் இராணுவ ஒப்பந்தங்கள் அமைதிக்குப் பங்கம் விளைப்பதுவேயாகும்.

காலனி ஆதிக்கமும் அப்படித்தான்! இந்த ஆதிக்க ஆசை, மேற்கு நாடுகளுக்கு இருந்தது ஒரு காலத்தில்! இப்போது நேரு உள்பட ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதத்தில் உள்ளது. நேருவுக்கு உள்ள இந்த ஆசையை ‘காலனி ஆதிக்கம்’ என்று பெயரிட்டுச் சொன்னால் சீறுவோர் இருக்கலாம். ஆனால் பிரிந்து வாழ விரும்பும் நாகநாட்டையும், தென்னகத்தையும், அவர் எப்படிக் கருதுகிறார்? எனப்படிக் கருதவேண்டும்? என்று யோசித்தால், ஆதிக்க ஆசையின் உருவம்தெரியும்! அதுபோலவே பர்மியப் பிரதமர் குறிப்பிடும் பொருளாதார ஏற்றத்தாழ்வு குறித்தும் நேரு நினைத்தால், வடக்கைப்போல தெற்கும் வாழும். எங்கே ஏற்படுகிறது, இந்த நினைப்பு? இன்னும் வடக்கு வளரவும், தெற்கு தேயவுமான நிலையும்தானே உள்ளது.

பெரிய நாட்டு ஆசை—மார்க்கெட் வைத்திருக்கும் ஆசை—எனும் இந்த இரண்டும் ஒழியாதவரையில், அந்தத் தொல்லைகளின்பாரத்தைஇந்தியாவும் தாங்கத்தான் நேரும். உலக வல்லரசுகளுக்கு பாடம் போதிக்க வரும் ஆசிய நாடுகள், இந்தப் புத்திமதிகளை கொஞ்சம் நேருவுக்கும் சொன்னால், நல்லது. உள்ளுக்குள்ளேயே புகைந்துகொண்டிருக்கும் எரிமலைகள் எதிர்காலத்தில் வெடிக்காமல் தடுக்கலாம். செய்யுமா கொழும்புநாடுகள்! ★

*6-ம் பக்கத் தொடர்ச்சி*

*திறப்பு விழாவாம்! மூடு விழாவாம்! இதற்கு பணம், கொள்ளை போகிறது!*

*இந்தத் ‘தூங்குமூஞ்சிகளை’ யார் காண விரும்புகிறார்கள்! எதற்காக இதுகள் விழா நடத்த வரவேண்டும்!*

*நாலணா செலவுக்கு நாலு ரூபாய் எடுத்துக்கொண்டு, கொழுத்துவிட்டார்கள்!*

என்று காரசாரமாக, நடையை நாராசமாக்கி எழுதுவர்! இப்போது தமது சொந்தக் கட்சியே இத்தகைய கேவலமான நடத்தையில் ஈடுபடுவதால், தினமணியால், இப்படியும் அப்படியுமாகத்தான் இடித்துக்காட்ட முடிகிறது. ஆனால், உண்மையை ஊரார் அறிந்துகொள்வதற்கு இவ்வளவேபோதும். இயற்கை கொஞ்சுகிறது, இல்லாமை கொட்டுகிறது, அதற்கான காரணத்தில் ஒன்று ஊராளும் பொறுப்பும் வாய்ப்பும் ஒரு ஊதாரிக் கூட்டத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பது. இதனை உணர்ந்துகொள்ள, தினமணியின் கண்டனம் போதுமானதுதான்.

இம் முறையில் ஊதாரித்தனமாக நடந்துகொள்ள எப்படி முடிகிறது? கேட்பதற்கு நாதி இல்லை! தினமணி எழுதுவதுகூட குதிரை பறிபோனபிறகு கொட்டிலைப் பூட்டும் கதை போன்றதுதான். கமிட்டிகள், ஜமாக்கள், விழாக்கள், வீண் செலவுகள், இவை கிளம்பும் போதே, ஆட்சி மன்றத்திலே, கேள்விக் கணைகளைப் பூட்டி, தடுத்து நிறுத்த, எதிர்க்கட்சி எங்கே இருக்கிறது? கடிவாளம் இல்லை, குதிரை, காடுமேடு தாவிச் செல்கிறது!! எதிர்க்கட்சி இல்லை, எனவே ஊரார் பணம் ஊதாரிச் செலவுக்குப் பாழாக்கப்படுகிறது!!

இரண்டாயிரம் கோடி என்ன—இருபதினாயிரம் கோடி செலவானாலும், இப்படிப்பட்ட துரைத்தனம் நடத்துவோரின் தர்பாரில் நாடு சிக்கிக் கிடக்கிறவரையில், இல்லாமை கொட்டத்தான் செய்யும்—இதனைத் தம்பி! அரசியல் விளக்க ஏடுகள் படித்தவர்கள் அறிந்துகொண்டிருப்பதைவிட, நான் காட்டினேனே, ஒரு அணா கொடுத்த உழைப்பாளி, அப்படிப்பட்டவர்கள் மிக நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்,

இதுதானா இரகசியம்? நீங்கள், இல்லாமைக்குக் காரணமாக இருப்பவர்கள் இந்த ஊதாரித்தனமிக்க ஆட்சியாளர்கள் என்பதை எடுத்துரைக்கிறீர்களா—? இதைக் கேட்கத்தான், திரள் திரளாக மக்கள் கூடுகின்றனரா? அப்படியானால், நாங்களும் அதனையேதானே செப்புகிறோம்! உம்மைவிடச் சற்று அதிகமான வீரதீரத்துடன், காரசாரமாகவே சொல்கிறோமே........ என்று கேட்கும், மற்ற மற்ற கட்சிகளைக் காண்கிறேன்.

தம்பி! இயற்கை வளமளித்தும், உழைப்பு உற்பத்தி அளித்தும் கூட, இல்லாமை கொட்டுவதற்குக் காரணம், ஆட்சியாளர்களின் ஊதாரித்தனம் மட்டுந்தான் என்று கூறவில்லை. பல காரணங்களிலே இது ஒன்று என்பதை விளக்கிவிட்டு, ஊதாரித்தனமாக நடந்துகொள்ளாதீர்கள், ஊருக்குப் பயந்து ஆட்சி நடத்துங்கள், ஏழையின் வயிறு எரியச் செய்யாதீர்கள், என்று அறிவுரை கூறித் திருத்த முற்பட்டாலும், ஆட்சிக் குழுவினரையே கூட மாற்றி அமைத்தாலும், பலன் கிடைக்காது; ஏனெனில், நந்தம் நாட்டைப் பொறுத்த மட்டில், ஆட்சியிலே வீற்றிருப்போருக்கு, அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் மிகமிகக் குறைவு; ஆட்டிப் படைத்திட டில்லியிலே ஓர் பேரரசு இருக்கிறது, இங்கு உள்ளது, பேருக்குத்தான் அரசு என்ற உண்மையை எடுத்துக்காட்டுகிறோம்.

இதுபோது காணக்கிடைக்கும் இயற்கை அழகு ஒருபுறம் இருக்கட்டும், தம்பி, திராவிடம் முழுவதும் கூட அல்ல, தமிழகம் வரையிலேயே வேண்டுமானால், பார்க்கச் சொல்லு, பரந்த மனப்பான்மையினரை, என்ன வளம் இங்கு இல்லை? என்ன பொருள் கிடைக்கவில்லை?

தமிழ்நாடு எல்லை, சிதைக்கப்பட்டு, உரிய இடங்கள் பறிக்கப்பட்டுப் போன நிலையிலும், தனி அரசு செலுத்தி மதிப்புடன் வாழ்ந்து வரும் பல சுதந்திர நாடுகளைவிட, அளவிலும் வளத்திலும் பெரிதாகவே இருக்கிறது.

50170 சதுர மைல் அளவுள்ளது இன்றைய தமிழகம்!

தமிழகத்து மக்கள் தொகை மூன்று கோடி—இதில் 2,65,46,764 மக்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்,

*விளை நிலம் மட்டும் 12878000 ஏக்கர் உள்ளன என்று புள்ளி விவரத் தயாரிப்பாளர்கள் கூறுகின்றனர்.*

*விளை நிலம் ஆகத்தக்கதும், இன்று ஆட்சியாளரின் அசட்டையால் கரம்பாகிக் கிடப்பதும் மட்டும் 37 இலட்சம் ஏகருக்கு மேலிருக்கிறதாம்.*

*காட்டு வளத்துக்கும் குறைவு இல்லை.*

*விஞ்ஞானத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான கனிப்பொருள்கள் ஏராளமாக உள்ளன—பூமிக்கடியிலே தூங்கிக் கிடக்கின்றன!*

*இன்று புதிய முறை தொழில்களுக்காக*

**குரோமைட்**
**மோனசைட்**
**சில்மனேட்**
**கார்னெட்**

என்றெல்லாம் கூறுகிறார்களே, அப்பொருள்களும், உலகத்தின் போக்கையே மாற்றி அமைக்கத் தக்கதான

**தோரியம்**
**யுரேனியம்**

ஆகியவைகளும் தமிழகத்தில் ஏராளமான அளவுக்குக் கிடைக்கின்றன.

பொன்னும் மணியும் ஒரு நாட்டுக்கு வாழ்வும் வளமும் அளித்திடாது; ஆனால் எந்த நாடும் பொன்னொடு ஆகத்தக்க நிலையை ஏற்படுத்த இரும்பும் நிலக்கரியும் இருக்கவேண்டும். இந்த இரு செல்வங்களையும் தமிழகம் தன்னகத்தே கொண்டிருக்கிறது. நெய்வேலி பழுப்பு நிலக்கரியின் பாங்கினைப் பாராட்டாத நிபுணர் இல்லை; மிக உயர்தரமானது என்கின்றனர்; கிடைக்கும் அளவும் மிகப்பிரம்மாண்டமானது; பல நூற்றாண்டுகள் கிடைக்குமாம்!

கஞ்சமலை, கோதுமலை, கொல்லிமலை, கொத்தளமலை, பச்சைமலை, பெருமாமலை, தீர்த்தமலை, சித்தேரிமலை, ஆகிய இடங்களில், இரும்பு சிறைப்பட்டிருக்கிறது,விழிப்புற்று எழுச்சிபெற்ற தமிழகம் அமையுமானால் தூங்கிக் கிடக்கும் இந்தக் கருப்புத் தங்கத்தை வெட்டிக் கொணர்ந்து, தமிழகத்தைத் தொழிலகமாக்கி செழிப்பினைக் காணலாம். சேலம் மாவட்டத்திலே இரும்பு! தென் ஆற்காடு மாவட்டத்திலே நிலக்கரி! சேலத்து இரும்பு 30 கோடி டன் என்கிறார்கள். நெய்வேலி நிலக்கரி 100 சதுரமைல் அளவுக்கு அடைந்துகிடக்கிறதாம், 200கோடி டன் அளவு நிலக்கரி உள்ளது என்கின்றனர்.

சேலம் சேர்வராயன் மலையில் பாக்சைட், மாக்னசைட், திருச்சி அரியலூர் வட்டாரத்தில் ஜிப்சம், குமரி முனையில் தோரியம்,—தம்பி! காவிரிப் பகுதியில் பெட்ரோலாம்! எங்கெந்தப் பொருள் கிடைக்காமல் நாடு பல திண்டாடுகின்றனவோ, அந்தப் பொருள் யாவும் இங்கு நமக்காக இயற்கை, கட்டிக் காத்து வருகிறாள்—கனிவுடன் அழைக்கிறாள். ஆனால், வெட்டி எடுக்க நமக்கு உரிமை ஏது!

கட்டித் தங்கமடா, மகனே! பல காலமாக உனக்காக நான் காத்து வந்திருக்கிறேன்,வெட்டி எடுத்துக் கொள் என்று வாஞ்சனையுடன் தாய் அழைக்கிறாள், தனயன், "அந்தோ அன்னையே! என் கரம் கட்டுண்டு கிடக்கிறதே!" என்று கண்ணீர் பொழிந்து நிற்கிறான்.

சேலத்து இரும்பு சிறைப்பட்டிருக்கிறது — டாட்டா கம்பெனிக்கு நாம் கப்பம் கட்டுகிறோம்.

நெய்வேலி நிலக்கரி வெளி வர மறுக்கிறது, இங்கு ஏழையின் கும்பி, இல்லாமையால் எரிகிறது! காடு போதும், நாட்டுக்கு செல்வமளிக்க! எனினும் இங்கு நஞ்சை கரம்பாகிறது — கரம்பு கள்ளி காளான் படரும் இடமாகிறது. பச்சை மாமலைகளும், பளிங்கன்ன நீரோடைகளும் இங்கு இருந்தும், பசி! பசி! என்று பதறிக் கதறி, வேலை கிடைக்காததால் வேற்றுச் சீமைகள் சென்று சோற்றுக்கு அலைகிறார்கள், நேற்று வரையில் நானிலம் போற்றிடத் தக்க நல்லாட்சியில் இருந்தவர்கள்.

கத்துங் கடலில் முத்து எடுத்து கடலகமெனத்தகும் கலம்தனில் ஏறிச்சென்று, காற்றை அடக்கி, யவனம் சென்று வாணிபம் நடாத்தி, பொன்னும் புகழும் ஈட்டினார் முன்னோர்.

நாமும் தமிழரே! நாமமதில் தமிழர் என்றாரே, பாரதியார், அந்தத் தமிழர்! நாம், நமது உடன்பிறந்தாரை, மலாய்க் காட்டுக்குத் துரத்திவிட்டிருக்கிறோம்! பர்மாவில் ரப்பர் பால் எடுக்கிறார்கள்—தாயகத்தின் கோலத்தை எண்ணி அழுகின்றனர்! இங்குள்ள ஏழை எளியவர்களோ இல்லாமை கொட்டும்போது, 'அக்கரை' சென்றாலாவது அரை வயிறு கஞ்சி நிச்சயமாகுமே, போகலாமா, என்று எண்ணி ஏங்கிக்கிடக்கின்றனர்.

கட்டழகி,கன்னிப் பருவத்தினள் கலகலெனச் சிரித்தபடி, மணமிகு சந்தனம் குழைத்துப் பூசி, மகிழ்தல்போல பொன்னிஎனும் பேரழகி பூரிப்பை அள்ளித் தெளிக்கிறாள். காவேரி தண்ணீர் பட்டால் கன்னியர் மேனி தங்கம், தங்கம்! என்று கவி சுரக்கிறது, அவள் எழிலை எண்ணும்போதே.

செங்நெலைக் கண்டு செங்கமலம் சிரிக்கிறாள்—அன்னம் அதுகண்டு நின்ற நிலையிலன்றோ நீ இருப்பாய், என்போல் குடைந்தாடி மகிழவல்லாயோ என்று கேட்டு கவர்ச்சியூட்டக் காண்கிறோம்.

கன்னல் விளைகிறது, காரமிக்க மிளகுக் கொடிகள் படருகின்றன!

உலகின் தொழில்துறை பலவற்றுக்கும் தேவையான ரப்பர் விளையும் காடுகள்—மனைக்கும் மரக்கலத்துக்கும் தேவையான தேக்கு — ஓங்கி வளரும் தெங்கும், ஒயிலாகக் காட்சி தரும் கமுகும், என்னென்ன எழில், எத்துணை வளம், எல்லாம் நந்தம் இன்பத் தமிழகத்தில்!

முல்லை மணமும், காட்டிலே விளைந்துள்ள சந்தன மரத்திலே உடலைக் களிறு தேய்ப்பதினாலே எழும் நறுமணமும், தென்றலிற் கூடிக் கலந்து வந்து தமிழகத்துக்கு என்றோர் தனிமணமல்லவா தருவதாக உளது.

எனினும் வறுமை முடை நாற்றமன்றோ அடித்திடக் காண்கிறோம்.

சந்தன மணத்தைச் சாகடிக்கும் அளவுக்குச் சஞ்சலச் சாக்கடை நாற்றமடிக்கிறது.

இத்தனை இருந்தும் இல்லாமையை விரட்ட ஓர் மார்க்க

மின்றி இடர்ப்பட்டுக் கிடப்பதற்குக் காரணம், உள்ளத் தெளிவற்றோர், ஊதாரிகள், மக்களாட்சியின் மாண்பினை மாய்த்திடுவோர் பிடியில் ஆட்சி சிக்கி விட்டது என்பது மட்டுமல்ல, இவர்களின் அதிகாரம் என்பது செல்வர் சிலருக்குச் சுகபோகம் வழங்கிடவும், செல்லரித்துப்போன வாழ்வினர், பெருமூச்சினைச் சிறிது உரத்துக் காட்டினாலே, பிடி! அடி! சுடு! என்று அடக்குமுறை வீசவுமான அளவுக்குத்தான் அமைந்திருக்கிறது!! தமிழகத்தைத் திருநாடு ஆக்கும் திட்டம் தீட்டிச் செயல்படும் உரிமை இவரிடம் இல்லை! மக்களின் வாழ்க்கையில் உள்ள வாட்டத்தை ஓட்டிட, இயற்கை வளத்தையும் மக்களின் உழைப்பின் திறத்தையும் ஒன்று கூட்டிட, அதன் பயனாகக் கிடைக்கும் செல்வத்தைச் சமுதாய உடைமையாக்கிட இவர்கட்கு, உரிமை கிடையாது. எனவே, இயற்கை கொஞ்சியும் இல்லாமை மிஞ்சுகிறது என்றால், அதற்கான காரணங்களிலே மிக முக்கியமானது, இங்கு அமைந்துள்ளது பேருக்குத்தான் அரசு — சிலருடைய பெருமைக்குத்தான் அரசு— உண்மையில் முழு அதிகாரம் படைத்த அரசு அல்ல.

இது பிரசாரம்—தீதான பிரசாரம் எனகின்றனர் டில்லியிடம் வரம் கேட்டு வாங்கி வாழ்க்கையை நடத்தி வருவோர்.

இது குறுகிய மனப்பான்மை; குறை நெளியும் கொள்கை, தவறுள்ள தத்துவம் என்கின்றனர், அகிலமெலாம் கட்டி ஆளும் ஆற்றலைப் பெற்றோம் என்ற ஆசைக்குப் பலியானவர்கள்.

அமைச்சர்கள் —அதிலும் அமைச்சர் அனைவருக்கும் 'வாய்' அளித்திடும் நிதி அமைச்சர்— டில்லியின் ஆதிக்கம் என்பது அபத்தம் என்று அறைகிறார்.

ஆனால், இவர்களில் ஒவ்வொருவரும், தத்தமது தலையில் குட்டு, எரிச்சல் ஏற்படும் அளவுக்குப் பலமாக விழும்போது, பதறிப்பதறிக் குளற முன் வருகின்றனர்—ஆமாம்! டில்லியிடம் கேட்கவேண்டும்! எம்மிடம் இல்லை! என்று பேசுகின்றனர்.

முதலமைச்சர் காமராஜரே கூடப் பேசுகிறாரே, உயிர் நீத்த உத்தமர் சங்கரலிங்கனாரின், கோரிக்கைகள் 12ல், 10 மத்திய சர்க்காரைப் பொறுத்தது என்று

அமைச்சர்களாக ஆக்கப்பட்டுள்ள இவர்களுக்கு, டில்லியின் தயவு இருக்கும் வரையில்தான் 'பதவி பவிசு' எல்லாம்; டில்லியின் முகம் சிறிதளவு சுளித்திடும் அளவில் இவர்களின் போக்கு இருப்பினும்கூடப் போதும், காஷ்மீரச் சிங்கத்தின் கதிதான்!

பாகிஸ்தானில் உள்ளவர்கள் உன் இனத்தவராக இருக்கலாம், மார்க்கத்தால், பழக்க வழக்கத்தால், நடைநொடி பாவனைகளால், அங்கு உள்ளோர் நமது இனத்தவர் என்று தோன்றக் கூடும்— ஆனால் அந்தச் சபலத்துக்கு இடமளித்தால், உமது சுதந்திரம் சுக்குநூறாகும் — என்று அன்பு சொட்டச் சொட்டப் பேசி, காஷ்மீர் சிங்கம் ஷேக் அப்துல்லாவை வலையில் போட்டுக்கொண்டு, பாரதம் முழுவதும் உலாவரச்செய்து, அவரைக்கொண்டே ஜனாப் ஜின்னாவை ஏசச்செய்து, பாகிஸ்தானை எதிர்க்கச்செய்து, இவ்வளவுக்குப் பிறகு, அவர்காஷ்மீர் இந்தியாவின் நேசநாடாகமட்டும் இருக்கும், ஆனால் அடிமை நாடு ஆகாது, தனி நாடாகத்தான் இருக்கும் என்று கூறத் துணிந்ததும், அவர் வாயை அடைத்து கைகாலைக் கட்டி, சிறையில்போட்டுப் பூட்டி, வழக்கும் போடாமல், வாட்டுகிறார்களே! சிங்கத்துக்கே இந்தக் கதி என்றால் சிறு நரிகள் கதி யாதாகும்!! இந்த அச்சம், நமது அமைச்சர்களைப் பிடித்தாட்டுகிறது.

இந்த நிலைமையைத் தம்பி, நாம் ஒவ்வோர் நாளும் கூறுகிறோம், ஒவ்வோர் துறையிலே கிளம்பிடும் பிரச்சினைகளையும் எடுத்துக் காட்டிக் காட்டிக் கூறுகிறோம்.

நமக்கு ஏன் இந்த வம்பு என்று இருக்கும் இயல்பினர்கூட தமக்குத் தனி அக்கரையுள்ளதென்று உள்ள பிரச்சினைகளிலே, டில்லியின் இரும்புக் கரம் அழுத்தமாக விழுகிறபோது, அலறித் துடித்துக் கிளம்புகின்றனர்.

இறக்குமதி ஏற்றுமதி சம்பந்தமாக நீதி கிடைக்கவேண்டும், டில்லியிடம் நீதி கிடைக்கவில்லை, என்று மனம் உறுத்தும்போது வாணிபத்துறையினர், வாய் திறக்கின்றனர்—எல்லாம் டில்லியிடமா! ஈதென்ன முறையற்ற செயல்!!— என்று குமுறுகின்றனர்.

தொழில் துவக்குவோர், துவக்கிடும் தொழில் துவண்டிடக் காண்போர், மனம் நொந்த நிலை பெறுகிறபோது, எழுகின்றனர், எல்லா வளமும் வடக்கேதானே! தெற்கை யார் கவனிக்கிறார்கள்? என்று கேட்கின்றனர்.

அவ்வப்பொழுது அனந்தராமகிருஷ்ணன் எனும் தொழிலதிபர், பேசிடக் கேட்கிறோமல்லவா?

அமைச்சர்களேகூடச் சிலவேளைகளில், பேசிவிடுகின்றனர் —பிறகு அஞ்சி ஆமையாகிவிடுகிறார்கள்.

குமாரசாமி ராஜா அவர்கள் குமுறிய உள்ளத்தோடு பேசத் தலைப்பட்டதை, நாடு எங்ஙனம் மறந்துவிடும்! எல்லாம் மத்திய சர்க்காரில் என்று இருக்கும் நிலைமையை எதிர்த்துப் போரிடவேண்டிய காலம் விரைவில் வரும் என்றல்லவா கூறினார்.

தமிழகம், அவர் இந்தத் துறையில் முனைந்து நிற்பாரானால், வாழ்த்தி வரவேற்றிருக்கும், வணங்கி அவர் தலைமையைப் பெற்றிருக்கும்.

கோவையில் கொதித்தெழுந்தவர், பிறகு ஏனோ மௌனமாகிவிட்டார். காலம் கனியவில்லை என்று கருதுகிறாரோ—என்னவோ!

எனினும் அவரவருக்கு முக்கியமானது—உயிர்ப் பிரச்சினை என்று கருதத்தக்க கட்டம் கிளம்பும்போது, அவர்களெல்லாம், டில்லியின் ஆதிக்கம் ஆகாது, கூடாது, பெருந்தீது! என்று பேசுவது காண்கிறோம்.

இவர்களெல்லாம் தொடர்ந்து இந்தக் கருத்தை நாட்டிலே எடுத்துரைத்து, மக்களைப் பக்குவப்படுத்தலாகாதா என்று ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கிறோம்.

பிறகோ அவர்கள், வாய்மூடிடக் கண்டு வாடுகிறோம்; சரி, சரி, இன்னும் இவர்களே பக்குவப்படவில்லை என்றெண்ணிக்கொண்டு, நாம் நமது பணியினைத் தொடர்ந்து செய்து வருகிறோம். ஒரு அணு கொடுத்தானே, உழைப்பாளி; அவன் இதை அறிவான்!! நம்மிடமிருந்து தொடர்ந்து இந்தப் பணியை எதிர்பார்க்கிறான். சோர்வடையாதீர்கள்! என்றால் ஆன உதவியை நான் அளிப்பேன் என்று சொல்லால் அல்ல, செயலால் காட்டுகிறார்கள், இத்தகைய செம்மல்கள். அவர்களை அமைச்சர்கள் அறிவதில்லை.

**இந்தியாவிலிருந்து கலைத் தூதுக் குழுவினர் பலர் பலமுறை வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கின்றனர்.........மக்கள் போற்றி மகிழும் கலைஞர்கள் தமிழ்நாட்டிலிருந்து தூதுக்குழுவுக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பப்படவில்லை. ஊர் பேர் தெரியாத யாரோ ஒரு சிலர் தமிழ்நாட்டின் கலைஞராகப் போய்வருகிறார்கள். காரணம் என்ன? மக்களின் மனதை அறிந்து நடக்கும் ஆட்சி இல்லை. மத்திய அரசியலார், பாராளுமன்றத்தில் ஒருசிலரைமட்டும் நம்புகிறார்கள். அவர்கள் மனம்போல் எல்லாம் நடக்கிறது. மத்திய அரசியலாரின் போக்கை மாற்றவோ திருத்தவோ இங்குள்ள அரசியலார் முன்வருவதில்லை! அச்சம் தடுக்கிறது.**

தம்பி! பிரச்சினை, கலைத்துறை பற்றியது—எனினும் என்ன—எந்தத் துறையில் அநீதி காணப்பட்டாலும் அதனைக் கண்டித்துக் களைந்து எறியத்தானே வேண்டும்.

மத்திய அரசியலாரின் போக்கைக் கண்டிக்கிறார்—இதனை மாற்றாது இருக்கும் இங்குள்ள நமது பேர் அரசையும் கண்டிக்கிறார்.

அச்சம் தடுக்கிறது இவர்களை என்றார்.

பயந்தாங்கொள்ளிகள்—தொடை நடுக்கம் கொண்டோர் — கோழைகள்—என்றெல்லாம் அந்த அச்சம் என்பதற்குப் பல பொருளைப் பெறலாம். அச்சம் தடுக்கிறது! என்ன அச்சம்? அதுதான் தம்பி, ஷேக் அப்துல்லா பற்றிச் சொன்னேனே, அந்த அச்சம்தான். பதவியும் பவிசும் போய்விடுமே என்ற அச்சம் — வேறென்ன? போனால் என்ன? மானமன்றோ பெரிது! நாடல்லவா பெரிது! என்று ஒரு அணு கொடுப்போன் கேட்பான்—ஆமாம்—அவனிடம் அணுக்கள் தானே உள்ளன. பதவியில் உள்ளவர்கள், மானத்தை இழந்துவிட்டாலும், இலட்சாதிபதியாகிறார்களே—அதிலே அவர்களுக்குத் திருப்தி — பெருமை—பாசம்! ஆசை ஊட்டவும் அச்ச மூட்டவும், டில்லிக்கு முடிகிறது.

டில்லிக்கு இந்த நிலை இருக்கும் வரையில், இங்கு அரசுக் கட்டிலில் அமருவோர் அடங்கி ஒடுங்கி 'அடைப்பம்' தாங்குமட்டும் கொலுவிருக்கலாம், ஏனென்று கேட்கத் துணிந்தால், ஷேக் அப்துல்லாவாக வேண்டும். இந்த அச்சம் தடுக்கிறது!

எனவேதான் தம்பி, ஆட்டிப் படைக்கும் டில்லியின் பிடியில் திராவிடம்சிக்கிக்கிடக்கும் நிலைமை ஒழிந்தாக வேண்டும் என்று நாம், கூறுகிறோம்.

**தமிழ்நாட்டு மக்களின் பலவகைக் கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. எல்லைப் பிரச்சினையைத் தமிழ் மக்கள் முன் ஒரு முறை எழுப்பியபோது, "கேட்கத் துணிந்துவிட்டீர்களா? கேட்டால் உள்ளதும் போய்விடும்" என்று செங்கோட்டையை எடுத்துப் பிறருக்குத் தந்தனர். மீண்டும் ஒருமுறை கேட்டபோது "அப்படியா? இன்னும் உங்கள் துணிவுபோகவில்லையா? தமிழ்நாடு என்று நாடும் இல்லாமல் செய்துவிடுவோம். தட்சிணப் பிரதேசம் என்று உங்களில் சிலரைக் கொண்டே மாற்றியமைத்துவிடுவோம். எங்களால் முடியும், தெரியுமா?" என்ற மிரட்டலே கிடைத்தது. அமைதியான கிளர்ச்சி ஒன்று நடந்தபோது "இவ்வளவா, தமிழ்நாடு என்ற பெயரும் கிடையாது, போ" என்று விரட்டலே கிடைத்தது.**

தெளிவாக, நிலைமை விளக்கப்பட்டிருக்கிறதே; படம்பிடித்துக் காட்டுவதுபோலிருக்கிறதே, யார் இப்படி விளக்கமாகத் தந்திருப்பவர்—என்று கேட்கத் துடிக்கிறாய் அல்லவா?

தம்பி, **மிரட்டல், விரட்டல்** என்று கூறியிருப்பதுகேட்டு ஆட்சியாளர்கள் மனம் 'சுருக்'கெனத்தான் தைக்கும். ஆனால், நிலைமை இதுதான். அச்சத்தால், இங்குள்ள அமைச்சர்கள் காலமெலாம் வாயடைத்துத்தான் கிடக்கின்றனர் — எப்போதோ ஓர் சமயமாகிலும், பொதுமக்கள் பொங்கி எழுவது கண்ட பீதியால், எதிர்க்கட்சிகளின் ஏளனம் குத்துவதால், ஓரோர் சமயம் உள்ளமே சுடுவதால் துடித்து எழுந்து, நீதி கேட்கின்றனர்—அப்போது டில்லியிடமிருந்து அவர்கட்குக் கிடைப்பது என்ன? **மிரட்டல்—விரட்டல்!**

ஆமாம், டில்லியின் போக்கையும் இங்குள்ள நம் அமைச்சர்களின் நிலையையும் அழகுபட எடுத்துரைத்துள்ள இவர் யார், என்றுதானே கேட்கிறாய்.

தம்பி, இவர் நமது கழகம் அல்ல. எந்தக் கழகத்தினரும் அல்ல, அரசியல்வாதியே அல்ல.

அப்படியா? அப்படியானால்...... யார்............என்று கேட்கிறாய், தெரிகிறது......கேட்டுப்பார், நண்பர்களை, இப்படி, டில்லி—சென்னை நிலைமைகளைப் படம்பிடித்துக் காட்டுபவர், யார் என்று; நீயே கூடத்தான் கண்டுபிடியேன் பார்க்கலாம். அடுத்த கிழமை நான் அவரை உனக்குக் காட்டுகிறேன்.

அன்பன்,

அண்ணாதுரை

# குடை

எப்பொழுது குடை ஆரம்பமாயிற்று? எங்கிருந்து ஆரம்பமாயிற்று? என்பன குறித்து நிச்சயமாக எதுவும் யாரும் கூறுவதற்கில்லை என்றாலும், கிறிஸ்து பிறப்பதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அது பயன்படுத்தப்பட்டு வந்தது என்பதற்கு மாத்திரம் நிச்சயமான ஆதாரம் உண்டு. பண்டைய காலத்தில் எல்லாம் அதையொரு உல்லாச பொருளாக மன்னர்கள் உபயோகித்து வந்தனர். அரசனும் ஆண்டியும் ஒரே மாதிரியான பயன்படுத்தும் ஒரு பொருளாய் மாற்றுவதற்குத்தான் பல நூற்றாண்டுகள் பிடித்தது.

பிரயாணியும், பண்டை புதை பொருள் ஆராய்ச்சி நிபுணருமான சர். ஆஸ்டென் லாயார்ட் என்பார் நினவே என்ற இடத்தில் கண்டு பிடித்தவற்றிலிருந்துதாம் குடை என்ற ஒரு பொருள் இருந்து வந்தது என்ற இரகசியம் அம்பலமாயிற்று. குடையென்ற ஒரு பொருள் பயன்படுத்தப்பட்டு வந்தது என்பதற்கு ஆரம்பகால அத்தாட்சியும் இதுவாகும்.

மேற்கண்ட ஆராய்ச்சியாளரின் கருத்துப்படி சமாதான காலத்திலும் யுத்த காலத்திலும் பொதுவாக மன்னர்கள் குடை ஏந்திச் சென்றனர். உருவத்தில் இப்பொழுது பொதுவான உபயோகத்தில் இருந்து வருவது போன்றே அக்கால குடையும் இருந்தது என்று சொல்லப்படுகிறது.

இந்தியாவின் பண்டைய சிற்பங்களில்கூட குடை பிரமாதமான காட்சி அளிக்கிறது. உதாரணமாகச் சாஞ்சியில் மேற்கு வாயிற்படியிலுள்ள முதல் ஸ்தூபியில் படகு ஒன்று செதுக்கப்பட்டிருக்கிறது. அப் படகில் ஓர் ஆடவர் நிற்கிறார். வெற்றாகவுள்ள சிம்மாசனம் ஒன்றும் அதில் காணப்படுகிறது. அந்தச் சிம்மாசனத்தின் மீது குடையொன்றைப் பிடித்துக் கொண்டு அந்த ஆடவர் நிற்கிறார். சாஞ்சியிலுள்ள இந்தச் சிற்பம் கிறிஸ்து பிறப்பதற்கு இரு நூற்றாண்டுகள் பழமையானது.

அஜந்தா குகையில் காணப்படும் சித்திரங்கள் தீட்டப்பட்டிருப்பவற்றில் மன்னர்கள் செல்லும் உல்லாசப் படகொன்று காணப்படுகிறது. இந்த உல்லாசப் படகிலும் குடையொன்றும் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

மேற்கத்திய நாகரிகத்தைப் பின்தொடர்ந்து குடை ஏற்பட்டதாகத் தோன்றுகிறது. பண்டைய கிரீஸிலும் ரோமிலும் அது ஓர் சுகபோகப் பொருளாகவும் கௌரவமிக்க பொருளாகவும் கருதப்பட்டு வந்தது.

கிரேக்கர்களின் குடை பாக்கஸ் என்ற உருவத்தின் தலைக்கு மேல் பிடிக்கப்பட்டது. பனாதீனியா என்ற மாபெரும்திருவிழா பண்டைய கிரேக்க நாட்டில் நடைபெறும். அதுபோது ஏதன்ஸிலுள்ள அயல் நாட்டினரின் புதல்விகள் எல்லாம் கிரேக்க ஆரணங்குகளின் தலைகளுக்கு மேல் குடை பிடிக்க வேண்டுமாம்.

பண்டைய ரோமர்களின் குடை தோலினால் செய்யப்பட்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது. அதை உயரத் தூக்கவும் இறக்கவும் செய்யலாம். ஆனால், அதைப் பெண்களும் ஆண்மையிழந்த ஆடவர்களுமே உபயோகப்படுத்துவது வழக்கம்.

இத்தாலியிலிருந்து பிரான்ஸ், ஸ்பெயின், போர்ச்சுகல் முதலிய நாடுகளுக்குக் குடை சென்றதாகத் தெரிகிறது. இந்நாடுகளிலிருந்து அது அமெரிக்காவுக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

பிரேஜிலில், தான் குடைகளைப் பார்த்ததாக ராபின்ஸன் குரூஸோ விவரிப்பது ஞாபகப்படுத்தத்தக்கதாகும். அதைப்போன்றே தானும் ஒன்றை அவன் செய்துகொண்டான் என்று சொல்லப்படுகிறது.

எப்பொழுது எப்படி குடை இங்கிலாந்து சென்றது என்பது எவர்க்கும் தெரியவில்லை. ஜூலியஸ் சீசரும் அவரைப் பின்பற்றிய ரோமானியர்களும் அதை எடுத்துச் சென்றனரா? அல்லது நாகரிகப் பாங்கான பிரஞ்சு மாதர்கள் ஆங்கில கால்வாயின் அக்கரைக்கு எடுத்துச் சென்றனரா? ரோமானியர்களிடையே முன்பு இருந்து வந்த பழக்க வழக்கங்களைக் கவனிக்கும் பொழுது அவர்கள்தாம் முதன் முதல் குடையைப் பிரிட்டனுக்கு எடுத்துச் சென்றிருக்க வேண்டும் என்று ஊகிக்க இடமிருக்கிறது. நூல்கள் சம்மந்தமான ஆதாரத்திலிருந்து பிரஞ்சு மாதர்கள்தான் குடையைப் பிரிட்டனுக்கு எடுத்துச் சென்றிருப்பர் என்பதும் சாத்தியமே. எது எவ்வாறாயினும் 17வது நூற்றாண்டு ஆரம்பத்தில் மாதர்கள் குடையை ஒரு மாபெரும் உல்லாசப் பொருளாகக் கருதினர் என்பது மட்டும் உண்மையாகும். 1616ல் பென் ஜான்ஸன் என்பவரால் எழுதப்பட்ட காதல் கதையொன்றில் குடை பற்றி அவர் குறிப்பிடுகிறார்.

டிரெய்டன் காலத்திலிருந்து ஆங்கிலக் குடைகளின் வெளிப்புறத்தில் இறகுகள் காணப்பட்டன. ஆன் அரசியாரின் ஆதிகாலத்தில் அவை எண்ணைப் பாங்கான பட்டால் செய்யப்பட்டன. மழையிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள மாதர்கள் குடைகளைப் பயன்படுத்தினர்.

தங்களை மழையினின்றும் காப்பாற்றுவதற்கு மாதர்களால் பொதுவாக உபயோகப்படுத்தப்பட்ட அகலமான ஒருவித மறைப்பே குடையென்று 1708-ல் கெர்ஸி என்பவர் விவரிக்கிறார்.

சூட்டுப் பிரதேசங்களில் சூட்டைத் தடுக்க பயன்படுத்தப்படும் ஒரு மறைப்பு என்றும் மற்ற நாடுகளில் மழையிலிருந்து தற்காப்புச் செய்து கொள்ள உபயோகப்படுத்தப்படும் ஒரு சாதனம் என்றும் ஜான்ஸன் குடை என்பதற்கு விளக்கவுரை தந்துள்ளார்.

மாதர்கள் குடை உபயோகப்படுத்தும் விஷயம் அடிக்கடி வலியுறுத்திக் கூறப்படுகிறது என்றாலும்கூட ஆங்கிலேய ஆடவர்கள் குடையைப் பயன்படுத்துவதற்குத் தைரியம் வர சுமார் 1-½ நூற்றாண்டு பிடித்தது.

1752-ல் அதுபோது லெப்டினன்ட் கர்னலாகவிருந்த உல்ப், பாரிஸிலிருந்து எழுதியதாக அறிவிக்கப்படுவது வருமாறு:—

இங்குள்ள மக்கள் சூடு தங்களைப்பாதிக்காமல் குடைகளைப் பயன்படுத்துகின்றனர். மழை, பனி ஆகியவற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவும் குடைகளைப் பயன்படுத்துகின்றனர். இவ்வளவு பயன்தரத்தக்க ஒரு பழக்கம் இங்கிலாந்தில் புகுத்தப்படாதது குறித்து நான் வியப்படைகிறேன்.

குடை ஒன்றைப் பயன்படுத்த துணியும் ஆண்கள் 'ஒயில் நடை போடும் பிரஞ்சுக்காரர்கள்' என்று வர்ணிக்கப்பட்டனர்.

★



அறிஞர் அண்ணாவின்

ரங்கோன் ராதா

தயாரிப்பு: மேகலா பிக்சர்ஸ்

சென்னை:
பிரபாத் • பாரகன் • சரஸ்வதி
பம்பாய்: அரோரா மற்றும் தென்னாடெங்கும்

வசனம்: மு. கருணாநிதி

டைரக்ஷன்: A. காசிலிங்கம்

...நேஷனல் பிக்சர்ஸ்...


காஞ்சீபுரம் 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.